வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 22.07.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 228 பக்கங்கள் : 16




# 8 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பதவியேற்றார்

## 29 ஆண்டுகளின் பின் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவானார்

கொழும்பு, ஜூலை. 22

இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக, ரணில் விக்கிரமசிங்க, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இந்த நிகழ்வு பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

பதவியேற்க பாராளுமன்றத்துக்கு நேற்று

15





# டலஸ்க்கு ஆதரவை வழங்குவதற்காக இந்தியாவின் பெயர் உச்சரித்தது தவறு

## தந்திரோபாயமற்ற-தன்னிச்சையான செயற்பாடுகளால் தமிழரசுக் கட்சிக்குப் பெரும் விபரீதம் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், ஜூலை 22

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தியா நிர்ப்பந்தித்துத்தான் ரணிலுக்கு எதிரான தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்ற கருத்து அங்கு பேசப்பட்டு இருக்கின்றதெனத் தகவல் வெளியாகியுள்ளது.**

அதனுடைய உண்மை எனக்கு தெரியாது. எதுவாக இருந்தாலும் அவ்வாறு இந்தியாவின் பெயரை உச்சரித்து அந்த தீர்மானத்தை எடுத்ததை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன்.”

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

எழுபது ஆண்டு கால அனுபவத்தைக் கொண்

15



# ஜனாதிபதி தலைமையில் இன்று புதிய அமைச்சரவை

கொழும்பு, ஜூலை. 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை நியமனம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலை

15

# சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு உதவவேண்டும்

## ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை

கொழும்பு, ஜூலை 22

சர்வதேச நிதி நிறுவனங்கள், தனியார் கடன் வழங்குவோர் மற்றும் ஏனைய நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப் பட்டுள்ளது.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்

15

# ஜி.எல்.பீரிஸ், டலஸ் ஆகியோர் பெரமுனவில் இருந்து நீக்கம்?

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி தெரிவின் போது, தனி வழி சென்ற ஜி.எல்.பீரிஸ் மற்றும் அழகப்பெரும ஆகியோர் பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து நீக்கப்படவுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

15

# ரணில் – சஜித் இடையே நேற்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதை அடுத்து முதலாவது கட்சித்

15

# நெருக்கடிக்கு தீர்வுகாண புதிய அரசு வழிவகுக்கும்

## ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை

கொழும்பு, ஜூலை. 22

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள நிலையில், இலங்கையின் நெருக்கடிகளுக்கு தீர்வுகாண புதிய அரசாங்கம் வழிவகுக்கும் என எதிர்பார்ப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு தனது ருவிட்டர் செய்தியில்

15

# எரிபொருள் பங்கீட்டு அட்டை முறையை குழப்புவதற்கு ஒரு சிலர் முனைகின்றனர்

## யாழ்.மாவட்ட செயலாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை. 22

பொதுமக்கள் பலரும் எரிபொருள் பங்கீட்டு அட்டை முறைமையின் நன்மைகளை வரவேற்கும் சமயம் ஒரு சிலர் இந்தத் திட்டத்தை குழப்புவதற்கு முனைவதையும் நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே அனைவரும் ஒத்துழைத்து இந்த முறைமை மூலம் சீரான எரிபொருள் விநியோகத்தை வழங்குவதற்கு ஒத்துழைக்கவேண்டும் என யாழ். மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு

15

# பொதுமக்களின் அபிலாஷைகளுக்கு ஆட்சியாளர் செவிசாய்க்க வேண்டும்



## சந்திரிகா வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 22

ஆட்சியில் இருப்பவர்கள் தங்களுடைய நலனுக்காக செயற்படாமல் பொதுமக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பது என்று முடிவெடுத்திருந்த அன்று, அதாவது நேற்று முன்தினம், ஈழநாடு - டான் ரிவி குழுமத்தின் தலைவர் குகநாதன், தனது முகநூலில் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார்.

அதனை அப்படியே கீழே தருகின்றேன்:

"கூட்டமைப்பால் யாருக்கு லாபம்?

"கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமவிற்கு ஆதரவளிக்க முடிவுசெய்ததால் ஆதாயம் பெறுபவர் யார்?

"கூட்டமைப்பு ஆதரிக்கும் வேட்பாளரை ஆதரிக்கக்கூடாது என்று இனவாத சிங்கள எம்.பிக்கள் முடிவெடுப்பர். அது ஐந்துக்கும் கூடுதலாகவே இருக்கும்.

"அதனால், டலஸ் சில வாக்குகளை இழக்கநேரிடும்.

"கூட்டமைப்பு வாக்களிப்பை புறக்கணித்திருந்தால், பத்து வாக்குகள் வாக்களித்திருக்காது. இப்போது வாக்களிப்பதால், அந்த பத்தில் ஐந்து வாக்குகளை ரணில் பெறுகிறார். இரகசிய வாக்கெடுப்பில் ரணிலுக்கு வாக்களிக்க ஐந்து கூட்டமைப்பு எம்.பிக்கள் முடிவு. ரணில் வென்றால், அவருடன் பணியாற்றுவது அவர்களுக்கு இலகுவானது என்று நினைக்கிறார்களாம். அடிக்கடி டீலுகளும் வரும்.

"இப்போது கணக்குப்போட்டுப்பாருங்கள் யாருக்கு லாபம்?"

இதுவே குகநாதன் எழுப்பியிருந்த கேள்வி.

அவரது கேள்வி எவ்வளவு தூரம் நிதர்சனமானது என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. கூட்டமைப்பின் ஆதரவுடன் வெற்றிபெறுகின்ற வேட்பாளருக்கு நாங்கள் வாக்களிக்கக்கூடாது என்பதற்காகவே, டலஸை ஆதரித்தவர்களின் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் டலஸுக்கு வாக்களிக்காமல் விட்டார்களா என்பது தெரியவில்லை. ஆனால்,

டலஸோடு கூடநின்றவர்களான விமல் வீரவன்ச, கம்மன்பில போன்றவர்களுடன் சேர்ந்து பயணிக்க கூட்டமைப்பு எப்படி தயாரானது என்பதும் தெரியவில்லை. முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாட் பதியுதீனின் கட்சி எப்படி ஒன்றாக பயணிக்க தயாராக இருந்தது என்பதும் தெரியவில்லை.

இப்போது நமது கவலை எல்லாம், ஒரு தேர்தலில் அதுகும் இருநூற்று இருபத்தியைந்து பேர் மாத்திரமே வாக்களிக்கின்ற தேர்தலில் எவர் வெற்றிபெறுவார் என்பதை கணிப்பிட முடியாத தலைவர்கள் அரசியலில் தலைமை தாங்க தகுதியானவர்கள்தானா என்று கேட்காமல் இருக்கவும் முடியவில்லை.

ஒரேயோரு எம்.பி.யாக பாராளுமன்றம் வந்தபோது, அவரை தேவையற்ற விதத்தில் அடிக்கடி சீண்டிப் பார்த்தவர்கள் நமது சுமந்திரனும் அவரது ஜூனியரும்தான். ஆனால் அவர்கள் கூட, ரணில் இப்படியொரு இடத்திற்கு வருவார் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். அவசியமில்லாமல், அவருடன் பகையை வளர்த்துவிட்டு, அவர் பின்னர் பதவியில் தொடர்வதையும் என்ன விலை கொடுத்தேனும் தடுக்கவேண்டும் என்று நினைத்தவர்கள் இப்போது அம்பலப்பட்டுப்போய் நிற்கின்றனர்.

எப்போதும் ஒருவரை வீழ்த்த வேண்டும் என்றால், நான் அவரை வீழ்த்தப்போகின்றேன் என்று அறிவித்துவிட்டு வீழ்த்த முயற்சிப்பது புத்திஜீவித்தனமானது அல்ல. அத்தகைய முயற்சியைச் செய்பவர் ஒரு சிறந்த தலைவராகவும் இருக்க முடியாது. தலைவராக வளர்ந்துவிடவும் முடியாது.

சம்பந்தனின் தலைமையில் கூட்டமைப்பு எடுத்த எந்த முடிவும் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் பெற்றுத்தரவில்லை. சுமந்திரனை கொண்டுவந்தார். அதனால் தமிழ் மக்கள் அடைந்த நன்மைகளை விட ரணிலும் பசிலும் அடைந்த நன்மைகள் தான் அதிகம். பின்னர் பலத்த போராட்டம் நடத்தி விக்கினேஸ்வரனைக் கொண்டுவந்தார். அதன் பலனை அவரே அனுபவித்தார். சரத் பொன்சேகாவை ஆதரித்தோம். பின்னர் மைத்திரியை ஆதரித்தோம். எல்லாமே தவறான முடிவுகளையே தந்தன. பின்னர் சஜித்தை ஆதரித்தோம். இப்போதும் அதேபோல தவறான முடிவெடுத்து, டலஸ் அழகப்பெருமவை ஆதரித்தோம்.

இதற்குப்பின்னரும் நான்தான் தலைமைதாங்கப் போகின்றேன் என்று சம்பந்தன் அடம்பிடிக்கப்போகின்றாரா? அல்லது அவரை இந்த நிலைக்கு கொண்டுவந்த சுமந்திரன் நான்தான் அடுத்த தலைவர் என்று அடம்பிடிக்கப்போகின்றாரா என்பதே இன்று தமிழ் மக்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும் கேள்வி.

பத்து எம்.பிக்களும் கூட்டாக முடிவெடுத்தபின்னர், "ஒரு கூட்டு தீர்மானம் எடுத்தால் அதன் பொறுப்பு முழுமையாக தீர்மானம் எடுத்த அத்தனை பேரையும் சாரும். அந்த பொறுப்பை எடுக்க மறுப்பவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள். அந்த பொறுப்பை நான் தனியே சுமக்க நேரிட்டாலும் அதற்கும் நான் தயார்" என்றும் ருவிட் பண்ணினால் போதுமானதல்ல, தவறான முடிவுக்கு பொறுப்பேற்று பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு வெளியேறவும்வேண்டும்.

இல்லையெனில் யாழ். பண்ணையிலும் ஒரு 'அரஹலய' ஏற்படுவதைத் தடுக்கமுடியாமல் போகலாம்.!

- ஊர்க்குருவி

# எதிர்க்கட்சியிலிருந்து ரணிலுக்கு ஒருவர்கூட வாக்களிக்கவில்லை

### கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, ஜூலை 22

புதிய ஜனாதிபதிக்கான நேற்றைய வாக்கெடுப்பின் போது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தோ அல்லது எதிர்க்கட்சிகளில் இருந்தோ ஒரு உறுப்பினர்கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றில் மக்களின் நிலைப்பாடுதானா வெளிப்பட்டது என கேட்க விரும்புகிறேன்? 2019 மற்றும் 2020 இல் இருந்த நிலைப்பாட்டிலிருந்து மக்கள் முற்றாக மாறிவிட்டார்கள்.

2020 இல் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு எதிராக, மக்கள் போராடிக் கொண்டிருக்கும்போது, குறித்த உறுப்பினர்களினாலேயே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருடர்களை வெளியே விரட்ட வேண்டும் என கோரியே மக்கள் போராடி வருகிறார்கள். ஆனால், இன்று அனைத்துத் திருடர்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதியாக ஒருவரை நியமித்துள்ளார்கள்.

இவர்கள் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கவே முற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதிய ஜனாதிபதி தெரிவின் போது, எமது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள் என கூறப்படுகிறது.

ஆனால், அப்படி ஒரு உறுப்பினர்கூட அவருக்கு வாக்களிக்கவில்லை என்பதை நான் இவ்வேளையில் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், எதிர்க்கட்சியிலுள்ள எந்தவொரு கட்சியினரும் அவருக்கு வாக்களிக்கவில்லை.

வாக்கெடுப்பின் ஊடாக எமது பலம் மேலும் அதிகரித்துள்ளது என்றே கூறவேண்டும். 64 ஆக இருந்த எமது பலம் இன்று 82 ஆக உயர்வடைந்துள்ளது.

20 ஆவது திருத்தத்திற்கு ஆளும் தரப்பில் 156 வாக்குகள் வழங்கப்பட்டன. ஆனால், நேற்றைய வாக்கெடுப்பின் போது 134 பேர் மட்டுமே வாக்களித்தனர்.

இதிலிருந்து அவர்களின் வீழ்ச்சியும், எமக்கான ஆதரவும் அதிகரித்துள்ளமையை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும், வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை மீட்டெடுக்க நாம் எம்மால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் செய்யத் தயாராகவே உள்ளோம்.

சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால், அது எவ்வாறு பயணிக்கப்போகிறது என்பதையே நாம் பார்க்க வேண்டும்.

எந்தத் தீர்மானமாக இருந்தாலும் கட்சியின் மத்திய குழுக்கூடியே முடிவுகளை எடுக்கும்- என்றார். (அ)

# யாழில் மாவட்ட செயலரின் அறிவிப்பை செவிமடுக்காமல் எரிபொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை. 22

யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் வெளியிட்ட எரிபொருள் விநியோகம் தொடர்பிலான அறிவிப்பை நம்பி பல மணி நேரமாக வீதியில் காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய அவலம் நேற்று நிகழ்ந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நேற்று முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பெற்றுக் கொள்ளலாம் என்றும், கியூ. ஆர். கோர்ட் முழுமையாக அமுல்படுத்தப்படும்வரையில் எரிபொருள் விநியோக அட்டையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் எரிபொருள் விநியோக அட்டையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் நிலையத்துக்கு மேலதிகமாக ஏதேனும் எரிபொருள் நிலையங்களில் அந்த அட்டையைப் பயன்படுத்தி பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பை நம்பிய மக்களில் பலர், எரிபொருள் இன்மையால் தமக்கு அண்மித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடந்த நள்ளிரவு தொடக்கம் நேற்று முற்பகல் வரையில் வீதியில் காத்திருந்தனர்.

எரிபொருள் விநியோகிக்கப்படும் இடத்தை அண்மித்த போது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என்று திருப்பி அனுப்பப்பட்டனர்.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் குறிப்பாக கல்வியங்காட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த பலர் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். அதற்கு பிரதேச செயலரின் அறிவுறுத்தலின்படியே தாம் நடந்துகொள்வதாகவும் தம்மால் அனுமதிக்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எரிபொருளில் தட்டுப்பாடு தொடங்கிய காலத்திலேயே எரிபொருள் பங்கீட்டில் இறுக்கமான நடைமுறையை யாழ்.மாவட்ட அரச அதிபர் பின்பற்றத் தவறியதாக மக்களால் பரவலாக குற்றம்சாட்டப்பட்டுவரும் நிலையில், புதிய நடைமுறையையும் இவ்வாறு சீரற்ற முறையில் முன்னெடுப்பதற்கு யார் காரணம் என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ)

# எரிவாயுப் பிரச்னைக்கு 31ஆம் திகதியுடன் தீர்வு

கொழும்பு, ஜூலை. 22

கடந்த 10 நாட்களில் 12.5 கிலோகிராம் நிறையுடைய சுமார் 7 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோவின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், மேலும் 40 லட்சம் எரிவாயு சிலிண்டர்கள் தேவைப்பாடு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கும் மேலாக எரிவாயு விநியோகம் இடம்பெறாத நிலையில், கடந்த 11ஆம் திகதி முதல் மீண்டும் எரிவாயு விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது, நாடு முழுவதும் 47 இலட்சம் எரிவாயு சிலிண்டர்களுக்கான தேவைப்பாடு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் தற்போது நிலவும் எரிவாயு பற்றாக்குறையை 100 வீதம் தீர்க்க முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (அ)

# புதிய ஜனாதிபதியுடன் சேர்ந்து பணியாற்ற பிரிட்டனும் தயார்!

கொழும்பு, ஜூலை. 22

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சாரா ஹில்டன் தனது ர்விட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற பிரித்தானிய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையிலும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயற்பட வேண்டும் எனவும் பிரித்தானிய தூதுவர் சாரா ஹில்டன் மேலும் கூறியுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
22.07.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்திய தூதரக சர்ச்சை?

சம்பந்தன் - சுமந்திரனின் நகர்வுகள் எப்போதும் சிக்கல்களிலேயே முடிவதுண்டு. இம்முறையும் அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. ஆனால் இம்முறை விடயம் பாரதூரமானது. சம்பந்தனின் இல்லத்தில், ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், குறித்த ஒருவரை தொலைபேசியில் அழைத்த விடயம் இறுதியில் இந்திய - இலங்கை உறவிலேயே பாரிய சிக்கல்களை ஏற்படுத்திருக்கின்றது. ஏனெனில், மறுபுறத்தில் பேசியவர் கொழும்பு இந்திய தூதரகத்தை சேர்ந்தவர் என்றும், அவர் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்குப்படி வலியுறுத்தியதாகவும் ஒரு சர்ச்சை ஏற்பட்டிருந்தது. எனினும் இந்த விடயத்தை தற்போது இந்திய தூதரகம் மறுத்திருக்கின்றது. இது தொடர்பில் சுமந்திரனோ அல்லது கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ பொது வெளிகளில் எதனையும் பேசவில்லை. இது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கை விடயங்களில் இந்தியா அவதானமாக இருக்கின்றது என்பது உண்மைதான், அந்த அடிப்படையில், இலங்கையில் இடம்பெறும் விடயங்களில் இந்தியா கூடுதல் கவனத்தை செலுத்தும் என்பதிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் தற்போது ஏற்பட்டிருக்கும் சர்ச்சை மிகவும் சிக்கலானது. ஏனெனில் ராஜதந்திர நடைமுறைகளை மீறும் வகையிலேயே இந்த விடயம் இடம்பெற்றிருக்கின்றது. உண்மையிலேயே இந்தியா சில விடயங்கள் தொடர்பில், கூட்டமைப்பின் நிலைப்பாடுகளில் செல்வாக்குச் செலுத்த விரும்பினால், அதற்கு வேறு வழிமுறைகள் உண்டு.

மேலும் கூட்டமைப்பிலுள்ளவர்கள் அனைவருமே இந்திய தூதரகத்துடன் நல்ல தொடர்பிலிருப்பவர்கள். அவர்களை நேரடியாக தூதரகத்திற்கு அழைத்தே விடயங்களை பேசியிருக்கலாம். இவ்வாறு தொலைபேசியில் பேசியிருக்க வேண்டியதில்லை. இந்த விடயங்கள் பலமான சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. அதேவேளை, சீன சார்பு நிலைப்பாட்டை கொண்டிருந்த பலர் டலஸ் அழகப்பெருமவிற்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தனர். குறிப்பாக விமல் வீரவன்ச, உதயகம்பன்பில, வாசுதேவ நாணக்கார ஆகியோர் தீவிர இந்திய மற்றும் அமெரிக்க எதிர்ப்பாளர்களாவர். இவ்வாறானவர்கள் இருக்கின்ற பக்கத்தை ஆதரிக்குமாறு எதற்காக இந்திய தூதரகம் கூற வேண்டும்? இந்தக் கேள்வியும் பலமான சந்தேகங்களை முன்கொண்டுவருகின்றது.

இது ஒருபுறமிருக்க, தற்போது ரணில் விக்கிரமசிங்க 50 மேலதிக வாக்குகளை பெற்று வெற்றிபெற்றிருக்கின்றார். இந்த விடயங்களை கணிக்க முடியாதளவிற்கு இந்திய உளவுத் துறை பலவீனமாக இருந்ததா? நிச்சயமாக அதற்கு வாய்ப்பில்லை. சாதாரணமானவர்களே ரணிலின் வெற்றிவாய்ப்பு தொடர்பில் நம்பிக்கை வெளியிட்டுக் கொண்டிருந்த நிலையில், ஒரு பிராந்திய சக்தியின் உளவுத்துறை இந்த விடயங்களை எந்தளவிற்கு கணித்திருக்கும். இந்த பின்புலத்தில் சிந்தித்தாலும் கூட, தூதரக அதிகாரி தொலைபேசியில் பேசிய விடயம் பலமான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

கூட்டமைப்பிலுள்ளவர்கள் இந்திய தூதரக அதிகாரியை தவறாக வழிநடத்தியிருக்கின்றனரா அல்லது, குறித்த ஒருவர் தானாக சிந்தித்துக் கொண்டு விடயங்களில் தலையீடு செய்திருக்கின்றாரா? ஏனெனில், கூட்டமைப்பை விடவும் அதிக தொடர்புகளை கொண்டிருக்கும் மலையக தொழிலாளர் காக்கிரஸ் ரணிலுக்கான ஆதரவை வெளியிட்டிருந்தது. இந்தியா ஏன் அவர்களுக்கு ஆலோசனை வழங்கவில்லை? எனவே விடயங்களை எந்தக் கோணத்தில் சிந்தித்தாலும் பதில் சிக்கலானதாகவே இருக்கின்றது. சுமந்திரன் ரணிலை எதிர்க்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டை தொடர்ந்தும் வெளியிட்டுக் கொண்டிருந்தார். இந்த நிலையிலேயே கூட்டமைப்பு டலஸ் அழகப் பெருமவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருந்தது.

ஆனால் இந்த விவகாரம் பாரதூரமானது. ஏனெனில், இந்த சம்பவத்தால் இந்திய தூதரகம் பல சங்கடங்களை எதிர்கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில் தமிழ்கூட்டமைப்புடன் ராஜதந்திர தொடர்புகளை பேணிக் கொள்வதிலும் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எந்த அடிப்படையில் கூட்டமைப்பினரை நம்பி செயற்படலாம் என்னும் கேள்வியும் எழலாம். அதே வேளை, ஒருவேளை, இந்திய தூதரக அதிகாரி ஒருவர் இதில் தொடர்புபட்டிருந்தால் அதுவும் தவறானது. அவர் ராஜதந்திர பொறுப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். அதேவேளை, கூட்டமைப்பின் தலைவர்களும் பொறுப்புள்ளவர்களாக, சொந்த புத்திக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். ஒரு தொலைபேசி அழைப்பை ஆராயமல் சிறு பிள்ளைகள் போன்று முவுகளை எடுக்க முற்படக் கூடாது. இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ - அவர்களின் நலன்களிலிருந்து, சில விடயங்களை முன்வைக்கக் கூடும். ஆனால் அவற்றை கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. ஒரு வேளை அவர்கள் சில விடயங்களை கோருகின்ற போது, அதற்கு பதிலாக அவர்களிடம் சில வாக்குறுதிகளை கோர வேண்டும். மேலும், யாரோ ஒருவர் தொலைபேசியில் கூறுவதை கேட்டு, முடிவெடுக்கக் கூடிய கையறு நிலையில் கூட்டமைப்பு இருப்பதானது, கூட்டமைப்பின் அரசியல்வாதிகளுக்கு பெருமையானதல்ல அத்துடன் தமிழ் மக்களுக்கு இது ஓர் அவமானமாகும்.

# 'பீல்ட் மார்ஷல்' கூறியது தமிழ்அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும் !

அலசுவது இராஜதந்திரி



ஒரு வாரத்துக்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் அதியுயர் பதவியை எட்டிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தென்னிலங்கை அரசியல் வாதிகள் சிலரது புறம் போக்கான அரசியல் நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்டபோது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் வே.பிரபாகரன் இருந்திருப்பாரோயானால் இன்றுள்ள அரசியல்வாதிகள் பலர் தமது விருப்பப்படி ஆட்டம் போட்டிருக்க மாட் டார்கள் என்று கூறியிருந்நதார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியதை நோக்கும் போது தென்னிலங்கை அரசியல் வாதிகள் மட்டுமல்ல. வடக்கு-கிழக்கின் அரசியல்வாதிகள் கூடவே பிரபாகரன் இருந்திருந்தால் தம்மனம் போன போக்கில் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்றே கருத முடியும்.

அரசியல் அமைப்பின் பிரகாரம் நேற்று முன்தினம் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ளார். இத்தெரிவு இன்றைய வடக்கு-கிழக்கு பிரச்சினையை பொறுத்தவரை தமிழ் அரசியல் தரப்பினருக்கு அனுகூலமானதாக இருக்கின்றதென்றே கருத முடியும். இதனை பிரபல சட்டத்தரணியான கே.வி.தவராசா 'ஈழநாடு' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி மூலமாகவும் ஊகிக்க முடிகின்றது.

வடக்கு - கிழக்கின் இன்றைய அரசியல் நிலபரத்தை பொறுத்தவரை ஒரு நீடித்து நிலைத்த அரசியல தீர்வுக்கு அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டமே ஏற்புடையதாக இருக்கின்றது.

அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது பாராளுமன்ற பிரதிநிதிகளாக இருந்தவர்களில் இன்றிருப்பவர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் ஆகியோரே என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு பிரச்சினைத்தீர்வுக்காக 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று ஓர் அமைச்சராக இருந்தார். அத்திருத்தச்சட்டத்தை பற்றி அன்றைய ஜனாதிபதி விளக்கமளித்தபோது செவிமடுத்தவர்களில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர்.

இந்நிலையில் எதிர் காலத்தில் அத்திருத்தச் சட்டம் மூலமாகவே ஒரு தீர்வைக்காண முடியும் என்பதே ஒரு முடிந்த முடிவாக இருக்கும் போது நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதியைத்தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வாக்களிக்க முன்வந்தமை சட்டத்தரணி கே.வி.தவராசா குறிப்பிட்டது போல அவர்களது தூர நோக்கற்ற போக்கையே எடுத்துக்காட்டியிருந்தது.

ஆங்கிலத்தில் 'தெரியாத தேவதைகளை விட தெரிந்த பிசாசு மேலானது' என்ற பழமொழி ஒன்றிருக்கின்றது. எனவே 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதனோடு பரிச்சயப்பட்டவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் குறித்து பேசுவதே உசிதமானதாக அமைய முடியும்.

இதைவிடுத்து 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குமாறு வெறுமெனே இலங்கை அரசியல் வாதிகளிடமும், இந்திய அரசியல் வாதிகளிடமும் கேட்டுக்கொண்டிருப்பதைவிட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை ஆரம்பித்து வேண்டுமானால் இந்திய அனுசரணை, சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு வடக்கு-கிழக்கின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண்பதே அறிவு பூர்வமானதாக இருக்க முடியும்.


இதுவிடயத்தில் வடக்கு-கிழக்கின் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்வதே காலத்தின் தேவையாகின்றது.

தென்னிலங்கையில் இளஞ்சந்ததியினர் அண்மைக்காலங்களில் வெளிப்படுத்திவருகின்ற எழுச்சியோடு அரசியல் கோதாவில் பலதரப்பட்ட மாற்றங்கள் இனிவருங்காலங்களில் இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருதலாம்.

ஐக்கிய தேசிய கட்சி சார்பாக ஏறத்தாள முப்பது வருடங்களின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பாராளுமன்றினூடாக தெரிவாகியுள்ளார்.

இந்நிலையில் முன்பு விட்ட தவறுகளை மீளவும் புரிந்து விடாது தூரநோக்கோடு மட்டுமல்ல. கூர்மையான நோக்கோடும் தமிழ் தேசிய கூட்டடைமைப்பு மட்டுமல்ல. அனைத்து வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் செயல்படுவதே இன்றியமையாதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 22 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 06
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி




**மேடம்**
கவனமுடன் செயல்படுவதால் உங்கள் முயற்சி வெற்றியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். செயல்களில் எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும். வியாபாரத்தில் கவனம் தேவை.

**இடபம்**
லாப குரு வக்கிரமடைந்துள்ளதால் பொருளாதார தடை உண்டாகும். செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விவாதங்கள் உண்டாகும். கவனமுடன் செயல்படுங்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். நீண்ட நாட்களுக்குப் பின் உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கடகம்**
வாய்ப்புகளைப் பயன்படுத்தி எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். நண்பர்களின் பிரச்னைகளில் தலையிட்டு தீர்த்து வைப்பீர்கள்.

**சிம்மம்**
இரண்டு நாட்களாக ஏற்பட்ட நெருக்கடி விலகும். பண முயற்சி பலிதமாகும். தடைபட்ட செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் என்பதால் செயலில் நெருக்கடி தோன்றும். மனம் சோர்வடையும். முயற்சியில் தாமதம் உண்டாகும். அடுத்தவர் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**துலாம்**
சத்ரு ஸ்தானாதிபதி வக்கிரம் என்பதால் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். குடும்பத்தில் உண்டான சங்கடம் விலகும். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும்.

**விருட்சிகம்**
தடைகளை விலக்கி புதிய பாதையில் பயணம் செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். புதிய முயற்சிகள் நன்மையாகும்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சேமிப்பில் உங்கள் கவனம் செல்லும். எதிர்பார்த்த மகிழ்ச்சியை அடைவீர்கள்.

**மகரம்**
அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள். வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். வியாபாரத்தில் கவனம் அதிகரிக்கும். எதிர்பார்த்த ஒருவரை சந்தித்து மகிழ்வீர்கள்.

**கும்பம்**
நீண்ட நாளாக முடிவிற்கு வராமல் இருந்த பிரச்னை இன்று முடிவிற்கு வரும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் செயல்களில் லாபம் காண்பீர்கள்.

**மீனம்**
வக்கிர குருவால் சங்கடம் விலகும். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். பழைய பிரச்னை முடிவிற்கு வரும். வருமானத்தை பெருக்க முயற்சிப்பீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

# 3 லட்சம் ரூபா மதிப்பிலான கடல் அட்டைகள் பறிமுதல்

## மண்டபம் வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை

சென்னை, ஜூலை. 22

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கடத்த இருந்த 3 லட்சம் மதிப்பிலான 25 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை பறிமுதல் செய்த மண்டபம் வனத்துறை அதிகாரிகள் கடல் அட்டையை வாகனத்தில் எடுத்து சென்ற இருவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் கடத்த இருப்பதாக மண்டபம் வனத்துறையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நேற்று அதிகாலை மண்டபம் வனத்துறையினர் மண்டபம் அடுத்த மரைக்காயர்பட்டிணம் அருகே மண்டபம் வனசரகர் மகேந்திரன் தலைமையில் வனக்காவலர், வேட்டை தடுப்பு காவலர்கள் வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் இருந்து ராமேஸ்வரம் நோக்கி சங்கு ஏற்றி சென்ற சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது, சங்கு சாக்கு மூட்டைகளுக்கு அடியில் தடைசெய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

வனத்துறையினரால் பிடிக்கப்பட்ட சரக்கு வாகனத்தில் சுமார் 25 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் இருந்தது தெரியவந்தது. தொண்டியை சேர்ந்தவர் மீது வழக்கு பதிவு செய்த மண்டபம் வனத்துறையினர் ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

மண்டபம் வனத்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளின் சர்வதேச மதிப்பு சுமார் 3 லட்சம் ரூபாய் இருக்கலாம் என வனத்துறையினர் தெரிவித்தனர். (அ)

# தொடர் மழையால் ஸ்தம்பித்த ஊட்டி

சென்னை, ஜூலை. 22

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த 2 நாட்களாக மழை சற்று ஓய்ந்திருந்தது. இந்தநிலையில் ஊட்டியில் நேற்று முன் தினம் மழை மீண்டும் வெளுத்து வாங்கியது. காலை 11 மணி முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் 12 மணிக்கு பெய்யத் தொடங்கிய மழை மாலை 6 மணி வரை மழை நீடித்தது.

பிங்கர் போஸ்ட், தலைகுந்தா, படகு இல்லம், மத்திய பஸ் நிலையம், சேரிங் கிராஸ், ஊட்டி மார்க்கெட் பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. மழையால் கோடப்பமந்து கால்வாயில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஊட்டி படகு இல்ல சாலை ரெயில்வே பாலத்தின் கீழ் தண்ணீர் தேங்கியது. இதனால் ஊட்டி - காந்தள் இடையே செல்லும் நகர பஸ்கள் மற்றும் பிற வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. வாகனங்கள் மாற்று வழியில் திருப்பி விடப்பட்டன.

சுகாதார துறைக்கு அரசு கலைக்கல்லூரி சாலையில் இரண்டு இடத்தில் ராட்சத மரம் விழுந்தது. தீயணைப்பு துறையினர் இயந்திரங்கள் உதவியுடன் மரத்தை அறுத்து அகற்றினர்.

ஊட்டி சேரிங்கிராஸ் சாலையில் வெள்ளம் தேங்கியதால் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அங்கு நடந்த சாலை பணியால் அந்த பகுதி சேறும், சகதியுமாக காணப்பட்டது.

(அ)

# காற்று மாசிலிருந்து சென்னை மக்களை பாதுகாக்கவேண்டும்

## அன்புமணி ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஜூலை. 22

சென்னை புழுதிக்காடாக மாறுவதை சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு அரசும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. விதிகளை மதிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

சென்னை மாநகரில் நடைபெற்று வரும் மெட்ரோ ரெயில் திட்டம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுமானப் பணிகளால் வரலாறு காணாத புழுதி உருவாகி சென்னை மக்களை கடுமையாக பாதித்து வருகிறது. புழுதியையும், அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளையும் கட்டுப்படுத்துவது இந்த வளர்ச்சித் திட்டங்களின் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டிருக்கும் போதிலும், அது பின்பற்றப்படாதது கண்டிக்கத்தக்கது. இந்தப் பணிகளை ஒப்பந்தக்காரர்கள் இலவசமாக செய்யத் தேவையில்லை. அதற்காக திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை புழுதிக்காடாக மாறுவதை சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு அரசும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. கட்டுமானம் மற்றும் இடிபாடுகள் கழிவு மேலாண்மை விதிகள், இந்திய சுற்றுச்சூழல் திருத்த விதிகள், சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்ட உடன்படிக்கை ஆகிய வற்றின்படி சென்னை மெட்ரோ ரெயில் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள் ஆகியவற்றில் புழுதி பறப்பதையும், சாலைகளில் மண் கொட்டப்படுவதையும் தடுத்து நிறுத்த தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பான விதிகளை மதிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் காற்று மாசு பாதிப்புகளில் இருந்து சென்னை மக்களை ஓரளவாவது பாதுகாக்க வேண்டும் - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

(அ)

# "தமிழக மீனவர்களை உடன் மீட்கவேண்டும்"

சென்னை, ஜூலை. 22

சிங்களக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது கடந்த 3 வாரங்களில் இது நான்காவது முறையாகும். சிங்களப் படையினரின் இந்த தொடர் அத்துமீறலை இந்தியா இனியும் சகித்துக் கொண்டிருக்கக்கூடாது என பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வங்கக்கடலில் கோடியக்கரைக்கும் தலைமன்னாருக்கும் இடையே மீன் பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விசைப்படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சிங்களக் கடற்படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது. சிங்களக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது கடந்த 3 வாரங்களில் இது நான்காவது முறையாகும். இவர்களையும் சேர்த்து மொத்தம் 29 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்களப் படையினரின் இந்த தொடர் அத்துமீறலை இந்தியா இனியும் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது. கைது செய்யப்பட்ட மீனவர்களில் இதுவரை விடுதலை செய்யப்பட்ட 12 பேர் தவிர மீதமுள்ள மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்-இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

(அ)



## புதிய ஜனாதிபதியாக ரணில் தெரிவு, யாழ்.நகரில் வெற்றிக்கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஜுலை 22

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாண நகரில் வெடி கொழுத்தி வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து யாழ்.நகரின் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசுகளை கொழுத்தி மகிழ்ச்சியை பரிமாறிக்கொண்டனர்.

இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பதவிப் பிரமாண நிகழ்வில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவி பிரமாணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சில நாள்களுக்குள் புதிய அமைச்சரவை

கொழும்பு, ஜுலை 22

புதிய அமைச்சரவை எதிர்வரும் சில நாட்களுக்குள் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அனைத்து கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவரை ஜனாதிபதி பிரதமராக நியமிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்தால், புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

அத்துடன், 20 முதல் 25 பேர் கொண்ட புதிய அமைச்சரவை எதிர்வரும் சில நாட்களுக்குள் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிகளவான இளம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# ஐ.நாவின் அமைதிப் படையினர் நாட்டுக்குள் நுழையும் அபாயம்!

### எச்சரிக்கிறார் விமல் வீரவன்ஸ

**கொழும்பு, ஜுலை 22**

**நாட்டில் எதிர்க்காலத்தில் வன்முறைகள் வெடிக்குமானால், ஐ.நா.வின் அமைதிப்படை இலங்கைக்குள் வருகைத் தரும் ஆபத்து உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ எச்சரிக்கை விடுத்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலில் தோல்வியுற்று ஒன்றரை வருடங்கள் கழித்து பாராளுமன்றுக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, இன்று தாமரை மொட்டுக் கட்சியினரின் ஆதரவுடன் ஜனாதிபதியாகியுள்ளார்.

அதாவது தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்றி, தேர்தலில் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

மே 9 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்று, ஜுலை 9 ஆம் திகதி பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இன்று நேரடியாக ஜனாதிபதி ஆசனத்தில் அவர் அமர்ந்துள்ளார். 134 பாராளுமன்ற உறுப்பினர்கள் இவருக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள்.

டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தால், அவர் பக்கத்தில் பல கட்சிகள் உள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதனுடன் இணைந்த ஏனையக் கட்சிகள் என நாட்டு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் இணைந்து செயற்பட்டிருக்கும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியுள்ளமையினால், அந்த நிலைமை இல்லாமல் போயுள்ளது.

சர்வகட்சி அரசாங்கமொன்று இதன் ஊடாக ஒரு போதும் அமையாது. இதனால் மக்கள் மீண்டும் மீண்டும் துன்பப்படும் நிலைமையே காணப்படுகிறது.

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீ வைத்த சம்பவத்தின் பிரதிபலனாகவே இன்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரணில் ஜனாதிபதியாக வந்தால் மட்டுமே இவ்வாறான செயற்பாடுகள் இனிமேல் ஏற்படாது என்று கருதியே 134 பேர் அவருக்கு வாக்களித்துள்ளார்கள்.

இவர்களுக்கு நாடு குறித்து அக்கறையில்லை. தங்களின் பாதுகாப்பு மட்டுமே முக்கியமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. சர்வதேசமும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே உண்மையாகும்.

சர்வகட்சி அரசாங்கமொன்று அமைந்தால் மட்டுமே இது இரண்டையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் இந்த நிலைமை இன்னமும் மோசமடையலாம். நாட்டில் இரத்த ஆறு ஓட வேண்டும் என்றுதான் சர்வதேசமும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அப்படி நடந்தால், ஐக்கிய நாடுகளின் அமைதிப்படை இலங்கைக்குள் நுழையும் ஆபத்து உள்ளது. அல்லாவிட்டால் இந்தியாவின் அழுத்தத்திற்கு உள்ளாகவேண்டிய நிலைமை ஏற்படும்.

இறுதியில் போராட்டக்காரர்கள், போராட்டத்தை எதிர்ப்பவர்கள், புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவுக்கு வாக்களித்தவர்கள் என அனைவரும் பாதிக்கப்படுவார்கள்.

இதனுடன் இலங்கை இராஜ்ஜியத்தின் பயணமும் முடிவுறும். இந்த அச்சத்தினால் தான் நாம் சர்வக்கட்சி அர சாங்கமொன்றை ஸ்தாபிக்கு மாறு கோரினோம்.- என்றார். (அ)

## எம்.பியாகிறார் வஜிர அபேவர்தன?

கொழும்பு, ஜுலை. 22

ரணில் விக்கிரமசிங்கவினால் வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி வெற்றிடமானது.

இந்த ஆசனத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன நியமிக்கப்படவுள்ளதாக ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்தது.

எனினும் அந்த தகவல்களை ருவான் விஜேவர்தன நிராகரித்திருந்தார்.

இந்த நிலையிலேயே வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கின்றோம்!

### அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 22

புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். தனது உத்தியோகப்பூர்வருவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சவாலான காலங்களில், பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், ஜனநாயகம் மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் நிலையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு அனைத்து தரப்பினரும் தங்கள் முயற்சிகளை இரட்டிப்பாக்குவது கட்டாயமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இனப்பிரச்னைக்கு தீர்வினை புதிய ஜனாதிபதி வழங்குவார்

### ஜனநாயக போராளிகள் கட்சி நம்பிக்கை

கொழும்பு, ஜுலை 22

இனங்களுக்கிடையே புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சனைக்கான தீர்வுகளை தீர்ப்பதற்கான நெறிமுறைகளை புதிய ஜனாதிபதி கையாளுவார் என நம்புவதாக, புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான வாழ்த்து செய்தியில் ஜனநாயக போராளிகள் கட்சியினர் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உங்களது அரசியல் சாணக்கியமும் அரசியல் முதிர்ச்சியுமே இன்றைய வெற்றிக்கு காரணமாகிறது. இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியாக தெரிவு செய் யப்பட்டு உள்ளீர்கள். அதற்கு எமது வாழ்துக்களை எங்களது மக்கள் சார்பாக தெரிவித்து கொள்கிறோம்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், மக்களின் அன்றாட வாழ்வியல் சுமைகள், அரசியல் இஸ்திர மற்ற நிலைகளில் இருந்து இலங்கை விரைந்து மீண்டு வர செயலாற்றுவீர்கள் என திடமாக நம்புகிறோம்.

இனங்களுக்கிடையே புரையோடிப்போயிருக்கும் இனப் பிரச்சனைக்கான தீர்வுகளை தீர்ப்பதற்கான நெறிமுறைகளை கையாளவேண்டும் என தமிழ் மக்கள் சார்பாக கேட்டு நிற்கின்றோம்-என்றுள்ளது. (அ)

## மயந்த திஸாநாயக்க இராஜினாமா

கொழும்பு, ஜுலை 22

ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் படையின் தலைவர் பதவியினை மயந்த திசாநாயக்க இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கட்சியுடனான எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவு

### ஹரின் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித் திருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னான்டோ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினர் எனவும் அவர் கூறினார்.

இதில் 8 பேர் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற தகவலையும் அவர் வெளியிட்டார். (அ)

## ரயில் கட்டணங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 22

ரயில் கட்டணங்களை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இன்று வெள் ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர அறி வித்துள்ளார்.

இதேவேளை, ரயில் கட்டண திருத்தம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவின் கையொப்பத்துடன் இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய பயணிகள் போக்குவரத்து, கொள்கலன் போக்குவரத்துக்கான ரயில் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கையில் மேலும் 75 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 22

இலங்கையில் கொரோனா தொற்று பரவல் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் மேலும் 75 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் நேற்று முன் தினம் கோவிட்-19 வைரஸினால் பீடிக்கப்பட்ட 75 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் இது வரை பதிவான கொவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 664,647 ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 651 பேர் இன்னும் மருத்துவ மனையிலும், வீட்டில் மருத்துவ மேற்பார்வையின் கீழும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது வரை மொத்தமாக கோவிட்-19 தொற்றி லிருந்து 647,463 பேர் குணம டைந்து வீடு திரும்பியுள்ளனர். (அ)

## ரணில் ஜனாதிபதியாக வந்தாலும் போராட்டங்கள் முடிவுக்கு வராது

### கூறுகிறார் இந்திய முன்னாள் அமைச்சர்

புதுடில்லி, ஜூலை 22

**இலங்கையில் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தேர்வு செய்யப்பட்டாலும் கூட இங்கு இடம்பெறும் போராட்டங்கள் முடிவுக்கு வராது என இந்திய முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.**

ராஜபக்ஷ சகோதரர்கள் போலவே ரணில் விக்கிரம சிங்கவும் இலங்கை மக்களி டையே செல்வாக்கற்றவராக இருக்கிறார். அவருக்கு எதி ராகவும் போராட்டம் நடத் தப்படுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி யாக ரணில் தேர்வு செய்யப்பட் டதன் மூலம் போராட்டங்கள்



முடிவுக்கு வராது. அவரது தேர்வு ஒற்றுமை மற்றும் அமைதியான சூழல் மற்றும் சமாதா னத்தை ஏற்படுத்தாது எனவும் ருவிட்டரில் சிதம்பரம் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நிலவும் கொந் தளிப்பு மேலும் தொடரலாம். பொருளாதார நெருக்கடி சூழல் மேலும் மோசமடையலாம் எனவும் சிதம்பரம் கூறியுள்ளார். (அ)

## பொருளாதார நெருக்கடிக்கு ஐந்து மாதங்களுக்குள் தீர்வு

### மத்திய வங்கி ஆளுநர் கருத்து

கொழும்பு, ஜூலை 22

எதிர்வரும் 5 மாதங்களுக் குள் இலங்கையில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்க டிக்கான தீர்வினை காண முடி யும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சீ.என்.என் தொலைக்காட் சிக்கு வழங்கிய செவ்வியொன் றில் அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

இலங்கையிடம் தெளிவான திட்டம் மற்றும் தெளிவான பாதை உள்ளது.

அதனை பின்பற்றுவதன் ஊடாக இலங்கையின் தற் போதைய பொருளாதார



நெருக்கடிக்கு எதிர்வரும் 5 மாதங்களில் தீர்வு காண முடியும்.

அதுவரை கடினமாக கால மாக அமையும். எவ்வாறாயி னும், ஒளியை காணக்கூடிய சுரங்கத்தின் விளிம்பினை அடைந்துள்ளோம்.

எனவே, மக்கள் பொறு மையுடன் செயற்பட வேண் டும்-என்றார். (அ)

## ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வின்போது மின் தடை!

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி சத்தியப்பிரமா ணம் செய்யும்போது பாரா ளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட மின் தடை தொடர்பில் விசா ரணை நடத்த இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

8ஆவது நிறைவேற்று ஜனா திபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்பு விழாவை சுயாதீன தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பவும், ஏனைய தொலைக்காட்சிகள் மூலம் ஒரே நேரத்தில் ஒளிபரப்பவும் திட்டமிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சிவப்புக் கம்ப ளத்தில் பாராளுமன்ற வளாகத் திற்குள் நுழைந்ததும் நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது.

பாராளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடை கார ணமாக நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதாக பின்னர் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற வளாகத்தில் மின் தடை ஏற்பட்டால் இரண்டு நிமிடங்களுக்குள் ஜெனரேட்டர்கள் தானாக இயங்குவது வழக்கம் எனவும், ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும்போது சுமார் பத்து நிமிடங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இதன் காரணமாக, தொலைக் காட்சி சேவைகளில் நேரடி ஒளிபரப்பு வழங்க முடிய வில்லை என தெரிவிக்கப்படு கிறது. (அ)

## புதிய ஜனாதிபதியின் தெரிவு சமகால அரசியலுக்கான தீர்வு

### அமைச்சர் நஸீர் அஹமட் கருத்து

கொழும்பு, ஜூலை 22

மக்களால் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்ற உறுப்பி னர்களில் 60 வீதமானோரின் ஆதரவைப் பெற்று புதிய ஜனா திபதி தெரிவாகியிருப்பது, தாய்நாட்டின் கீர்த்தியை சர்வ தேசத்தில் உயர்த்தியிருப்பதாக சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரி வித்துள்ளார்.

நாட்டின் எட்டாவது நிறை வேற்று அதிகார ஜனாதிப தியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானமை தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-

தேவையான நேரத்தில் தகுதியான ஒருவர் ஜனாதிப தியாக தெரிவாகியுள்ளார். மக்கள் பிரதிநிதிகளில் 60 வீத மானோர் புதிய ஜனாதி பதியை ஆதரித்துள்ளனர். பல இனங்க ளையும் பெரும்பாலான கட்சி



களையும் பிரதிநிதித் துவப்படு த்தும்ம் எம்பிக்களது ஆதரவும் அவருக்கு கிடைத்துள்ளது.

ஐக்கிய இலங்கையை கட்டி யெழுப்ப வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகவே, இதை நான் பார்க்கிறேன். படுகுழிக்குச் சென்றுள்ள நாட்டின் பொரு ளாதாரத்தை தூக்கி நிமிர்த்த சர்வதேசத்தின் உதவிகளே தேவைப்படுகிறது.

இந்த நேரத்தில் ரணிலை ஜனாதிபதியாக பாராளுமன்றம் தெரிந்திருப்பது,மிகத் தீர்க்க தரிசனமிக்க செயலாகும். சர்வ தேசத்தில், புதிய ஜனாதிபதிக் குள்ள கீர்த்தியாலும், ஜன நாயகத்தில் ரணில் வைத்துள்ள நம்பிக்கையாலும் இந்த உதவி களைப் பெறமுடியும்.

இன வாதிகள் மற்றும் அடக்கு முறையாளர்களின் முகாம்களுக்குள் சிறுபான்மை கட்சிகள் முடங்கியதன் நோக் கம் எங்களுக்குத் தெரியாத விடயமுமில்லை. இந்தக் கூட்டத்தை தோற்கடித்து, அதிகாரத்துக்கு அலைவோ ருக்கு தக்க பாடம் புகட்டியுள் ளோம். மக்களின் பட்டினி யைப் போக்குவது பற்றிச் சிந்திக் காமல், பழிவாங்கும் மனநிலையில் உள்ள தலைவர் களை மக்கள் அடையாளம் காண வேண்டும்-என்றார். (அ)

## வவுனியாவில் பாடசாலை மாணவனை காணவில்லை

வவுனியா, ஜூலை 22

வவுனியாவில் பாடசாலை மாணவனை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, தேக்கவத்தை, ஆலடி சந்தியை சேர்ந்த ஜசோ தரன் கிஷால் என்ற 15 வயது பாடசாலை மாணவனே இவ் வாறு காணாமல் போயுள்ளார்.

நேற்று முன் தினம் காலை வீட்டிலிருந்து வெளியே சென்ற குறித்த மாணவன் இரவாகியும் வீடு திரும்பாததால் சந்தேக முற்ற மாணவனின் பெற்றோர் வவுனியா பொலிஸ் நிலையத் தில் முறைப்பாட்டைப் பதிவு செய்து தேடி வருகின்றனர்.

குறித்த மாணவன் தொடர் பில் தகவல் ஏதும் அறிந்தால் சிறு வனின் தந்தையான ஜசோதர னின் 077 559 9709 தொலை பேசி இலக்கத்துக்கு அழைத்து உதவு மாறு கோரப்பட்டுள்ளது. (அ)

# ராஜபக்ஷக்களின் நண்பன் அல்லன் நான் என்றுமே மக்களின் நண்பன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 22

**“நான் ராஜபக்சக்களின் நண்பன் அல்லன். நான் என்றுமே மக்களின் நண்பன்.” - இவ்வாறு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நேற்றுமுன்தினம் நண்பகல் புதிய ஜனாதிபதியாகத் தெரிவான ரணில் விக்கிரமசிங்க, மாலை கொழும்பு ஹுணுப்பிட்டிய கங்காராம விகாரைக்கு விஜயம் செய்தார்.**

இந்தப் பயணம் தனிப்பட்ட விஜயமாகத் திட்ட மிடப்பட்டிருந்தபோதிலும், ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அங்கு பிரிட்டனின் “ஸ்கை நியூஸ்“ ஊடகவியலாளர் ஒருவர், இந்நாட்டு மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள் என்றும், பழைய ராஜபக்ஷ ஆதரவாளரான நீங்கள் எப்படி அந்த மாற்றத்தை ஏற்படுத்துவீர்கள் என்றும் புதிய ஜனாதிபதி ரணிலிடம் கேட்டார்.

“நான் எப்படி ராஜபக்ஷக்களின் நண்பனாக இருக்க முடியும்? எனக்குத் தெரிந்த காலத்திலிருந்தே அவர்களுக்கு எதிரானவர். இன்று வெளிநாட்டில் இருந்து வந்து ராஜபக்ஷ ஆதரவாளரா என்று என்னிடம் கேட்கின்றீர்கள்” - என்று ரணில் பதிலளித்தார்.

“இலங்கை எதிர்பார்க்கும் மாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்துவது?” - என்று குறித்த வெளிநாட்டு ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கு,

“இலங்கை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த நான் தயாராக உள்ளேன். நான் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன். ஒரு ஊடகவியலாளராக நீங்கள் ஆழ்ந்த தேடலில் ஈடுபடவேண்டும். இது போன்ற கேள்விகளைக் கேட்காதீர்கள்” - என்று ரணில் பதிலளித்தார்.

“நீங்கள் ராஜபக்ஷக்களின் நண்பன் இல்லையா?” என்று மீண்டும் அந்த ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கு,

“நான் ராஜபக்ஷக்களின் நண்பன் அல்லன். நான் என்றுமே மக்களின் நண்பன். இன்னொன்றையும் கூறுகின்றேன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து நான் இதற்கு முன்னர் பணியாற்றியுள்ளேன். நான் அவருக்கு வாக்களித்ததில்லை. அவர் ஒருகட்சி, நான் இன்னொரு கட்சி. நான் ராஜபக்ஷக்களுடன் இணைந்து செயற்படுகிறேன் என்று கூறுவது நான் அவருடைய நண்பன் என்று அர்த்த மல்ல. எனக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை எனது கட்சியைப் பலப்படுத்துவதற்கான வாய்ப் புகளாக மட்டுமே பார்க்கின் றேன்” - என்று ரணில் பதிலளித்தார். (அ)

# கோட்டாவுக்கும் மகிந்தவுக்கும் கனடா தடை விதிக்கவேண்டும்

## ஹரி ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு, ஜுலை 22

இலங்கையில் இருந்து தப்பியோடி வெளிநாட்டில் தஞ்சமடைந்துள்ள இலங்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு தடை விதிக்குமாறு கனேடிய அரசாங்கத்தை அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி வலியுறுத்தியுள்ளார்.

செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய ஹரி ஆனந்தசங்கரி, 2009 ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டமைக்கும் போரில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கும் கோட்டபய மற்றும் மகிந்த இருவரும் பொறுப்புக் கூறவேண்டும்.

பொறுப்புக் கூறலை வலியுறுதி சர்வதேச சமூகம் ஒன்று பட வேண்டும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்க



டிகளைத் தொடர்ந்து அங்கு ஊழல் -மோசடி அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்தது. இதையடுத்து ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய தப்பியோடியுள்ளார்.

தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போது சிங்கப்பூரில் இருக்கும் கோட்டபய, வேறொரு நாடொன்றுக்கு சென்று தஞ்சமடைய எதிர்பார்த்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதற்கும், தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான அட்டூழியக் குற்றங்களுக்கு அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்து யுத்தத்தை வழிநடத்திய கோட்டபாய ராஜபக்ஷ பொறுப்புக் கூறவேண்டும்.

போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறச் செய்ய சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு போருக்குப் பொறுப்பான இலங்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக தடை விதிக்குமாறு கனேடிய அரசாங்கத்தை நான் வலியுறுத்துகிறேன்-என்றார். (அ)

# தேசிய தொலைக்காட்சிக்குள் கட்டாயமாக நுழைந்தவர்களைக் கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஜுலை 22

தேசிய தொலைக்காட்சிக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போராட்டக்காரர்கள் இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு பொலிஸ் தலைமையகம் பணிப்புரை விடுத்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, தொலைக்காட்சி வளாகத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைய முயன்ற நபர்களை வீடியோ காட்சிகள் மூலம் அடையாளம் கண்டு கைது செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நேரலை நிகழ்ச்சியில் இணைந்த இருவரில் ஒருவர் போராட்ட களத்திற்கு வந்தபோது போராட்டம் இடம்பெறும் இருந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்து விரட்டியடித்ததாகவும் தெரியவந்துள்ளது. (அ)

# 4 இலட்சம் ரூபா பணத்துடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது!

வவுனியா, ஜுலை 22

வவுனியாவில் 4 இலட்சம் ரூபாய் பணத்துடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சிதம்பரம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் 4 இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகரால் சிதம்பரபுரம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாடு தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிரோசன் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் கமகே மற்றும் பொலிஸ் கொன்டபிள்களான பண்டார, மதன்ராஜ், ரவிகரன் உள்ளடங்கிய பொலிஸார் துரித நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சிதம்பரபுரம் பகுதியில் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 50 வயது நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து திருடப்பட்ட 4 இலட்சம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணையின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இறுதி நேரத்தில் தமது முடிவை மாற்றிய டலஸ் ஆதரவாளர்கள்!

கொழும்பு, ஜுலை 22

ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்த பலர், இறுதி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களிக்கும் முடிவை மேற்கொண்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது குழு அண்ணளவாக 120 வாக்குகளை பெற்றுக் கொள்ளும் என நம்பப்பட்டது. எனினும், போட்டி முகாமின் சலுகைகளுக்கு பலர் அடி பணிந்துள்ளனர்.

பொது மக்கள் கருத்தை சட்டத்தை உருவாக்குபவர்கள் உணரவில்லை. ஜனாதிபதி தெரிவின்போது, ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளை பெற்ற இதேவேளை, மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளை பெற்றுள்ளார்.

இந்த நிலையில் நாட்டில் என்ன நடக்கிறது என்பது குறித்து பாராளுமன்றம் உணரவில்லை. மேலும் பாராளுமன்றம் ஊழல் நிறைந்த அமைப்பு என்று பொதுமக்கள் கூறுவது, சட்டத்தை உருவாக்குபவர்களிடம் எந்த உண்மையான தாக்கத்தையும் ஏற்படுத்த வில்லை-என்றார். (அ)

# பன்னிரு திருமுறைப் பாடல்கள் 13 மொழிகளுக்குப் மொழிபெயர்ப்பாகின்றன!

**மறவன்புலவு**
**க. சச்சிதானந்தன்**

கனவுகளை நனவுகளாக்குபவர் சிவ பெருமான். நனவுகளாக்கத் துணையே வினைப் பயன் அல்லது தொல்வினை அல்லது சஞ்சிதம் அல்லது என் மரபணுக்களில் புதைந்த என் முன்னோரின் நல்வினை.

தொல்வினை எனக்குத் துணையாயது. சிவபெருமான் அருள் பெற்றேன். இந்தப் பிறவியிலும் அவை என் நல்வினைகளுக்குத் துணை. என் கனவுகளை நனவாக்கத் துணை.

தருமபுரம் ஆதீனம் தவத்திரு 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள், திருமடத்துக்காகப் பன்னிரு திருமுறைகளைப் பதிப்பிக்குமாறு என்னை வலியுறுத்தி ஈடுபடுத்தியமை, தொடர்ந்த அவரின் நெஞ்சார்ந்த வாழ்த்து, என் தொல்வினையும் சிவபெருமான் திருவருளுமே.

தமிழ்நாட்டில் இல்லாத திறமையா? புலமையா? ஆற்றலா? ஆனாலும் தவத்திரு 26ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் என் தயக்கத்தைப் போக்கினார். நீயே செய்து தரவேண்டும் எனப் பன்னிரு திருமுறைப் பதிப்புப் பணிக்குள் என்னை ஆழ்த்தினார்.

18,268 பாடல்கள். 1254 பதிகங்கள். 283 திருக்கோயில். 27 அருளாளர். தருமபுரம் ஆதீனப் பதிப்பான பன்னிரு திருமுறைகளுள் அடக்கம்.

அறிவுக் களஞ்சியம். தமிழர் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிப் பேழை. இறை உணர்வுக்கு வழிகாட்டி. தொண்டு, பூசை, ஒடுக்கம் தெளிவு எனும் உயிரின் நான்கு பயணத் தொடரோட்ட வழிகளுக்குக் கலங்கரை விளக்கு.

19,000 பக்கங்கள் கொண்ட 16 பகுதிகளாலான தருமபுர ஆதீனத் திருமுறைப் பதிப்பில் ஒவ்வொரு எழுத்து, ஒவ்வொரு சொல், ஒவ்வொரு வரி, ஒவ்வொரு பந்தி, ஒவ்வொரு பக்கம் என என் கண்கள் படித்தன.

இவ்வளவும் தமிழருக்குள்ளே முடங்கிக் கிடப்பாதா? உலகுக்கு இவை தெரியவேண்டாமா? உலக மனித வளர்ச்சிக்குத் துணையாக வேண்டாமா?

64 நாடுகளில் பயணித்தேன். பல் மொழியாருடன் பழகினேன். அவர்களுக்குப் பயன்தருவன பன்னிரு திருமுறைக்குள் ஒளிந்திருந்தமை உணர்ந்தேன்.

தவத்திரு 26ஆவது குருமகாசந்நிதானம் அவர்களிடம் சொன்னேன். பன்னிரு திருமுறைகளைத் தமிழிலிருந்து பல மொழிகளுக்கு மொழிபெயர்ப்பிக்க வேண்டும் என்றேன்.

வாழ்த்தினார்கள். உற்சாகித்தார்கள். ஊக்குவித்தார்கள்.

பன்னிரு திருமுறைகளுள் முதலில் அயல் மொழியார் எடுத்துச் சென்றது பெரியபுராணம். மொழிபெயர்ப்பாக அன்று. தழுவலாக.

பெரிய புராணம் அரங்கேறிய 60ஆவது ஆண்டில் கன்னடத் தழுவல் வெளியாயது. 160 ஆண்டுகளின் பின் மற்றொரு கன்னடத் தழுவல் வெளியாயது. 400 ஆண்டுகளின் பின் வட மொழித் தழுவல் வெளியாயது. 500 ஆண்டுகளின் பின் தெலுங்குத் தழுவல் வெளியாயது. அதே காலத்தில் மற்றொரு வடமொழித் தழுவலும் வெளியாயது.

பெரியபுராணம் தவிர்ந்த வேறு திருமுறை எதுவும் தழுவலாகவோ மொழிபெயர்ப்பாகவோ அதுவரை வெளிவந்தமைக்குச் சான்றுகளைத் தேடுகிறேன்.

திருவாசகம் அரங்கேறி 1100 ஆண்டுகளின் பின் ஆங்கிலத்தில் முழுமையாக மொழிபெயர்ப்பாயது.

அதே காலத்தில் பன்னிரு திருமுறையில் தேர்ந்த சில பாடல்கள் மொழிபெயர்ப்பாகவும் ஒலிபெயர்ப்பாகவும் மலையாளத்தில் வெளியாயின.

1125 ஆண்டுகளின் பின் திருவாசகம் முழுவதும் யேர்மனுக்கு மொழிபெயர்ப்பாயின. பெரிய புராணத் தழுவலும் யேர்மன் மொழியில் அதே ஆண்டில் வெளிவந்தது.

பன்னிரு திருமுறையின் பல பகுதிகள் ஆங்கிலத்தில் வரிசையாக வெளிவரத் தொடங்கின. ஒன்பதாம் பதினொன்றாம் திருமுறைகளைத் தவிர யாவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பாயின.

அப்பர் தேவாரம், திருவாசகம் எனத் திருமுறைப் பகுதிகள் இந்தியில் மொழிபெயர்ப்பாகின.

பெரியபுராணத்தின் முற்பகுதியின் பாடலுக்குப் பாடல் கன்னட மொழிபெயர்ப்பும் பதிப்பைக் கண்டது.

பெரியபுராணத்தின் காரைக்கால்அம்மையார் புராணம் பிரஞ்சு மொழியில் பதிப்பாயது.

தவத்திரு 26ஆவது குருமகாசந்நிதானம் அவர்களிடம் பன்னிரு திருமுறைகளைத் தமிழிலிருந்து பல மொழிகளுக்கு மொழிபெயர்ப்பிக்க வேண்டும் என எடுத்துக் கூறிய காலத்தில் மேற்காணும் தழுவல் மற்றும் மொழிபெயர்ப்பு முயற்சிகள் நிறைந்தன.

தவத்திரு 26ஆவது குருமகாசந்நிதானம் அவர்களிடம் ஆணை பெற்றபின் சம காலத்தில் 13 மொழிகளுக்குப் பன்னிரு திருமுறைப் பாடல்கள் மொழிபெயர்ப்பாகி வருகின்றன.

சிவபெருமானின் திருவருளும் என் வினைப்பயனும் தவத்திரு குருமகாசந்நிதானத்தின் வாழ்த்தும் இம் மொழிபெயர்ப்புப் பணியில் ஏறத்தாழ 40 மொழிபெயர்ப்பாளர்களை ஒருங்கிணைக்கும் பேற்றை எனக்காக்கியது.

1. தெலுங்கு, 2. கன்னடம், 3. மலையாளம், 4. சிங்களம், 5. இந்தி, 6. வடமொழி, 7. மலாய், 8. மியன்மார், 9. ஆங்கிலம், 10. யேர்மன், 11. வங்காளம், 12. நேபாளம், 13. அசாம் ஆகிய மொழிபெயர்ப்புகள் தொடர்ச்சியாக வந்து கொண்டே இருக்கின்றன. திருவருள், வினைப்பயன், குருவருள் யாவும் கனவுகளை நனவாக்குகின்றன.

20.7.2022 அன்று புதன்கிழமை இச்செய்திகளைத் தொகுத்ததற்குக் காரணமுண்டு.

பன்னிரு திருமுறையின் 18,268 பாடல்களுள் 13,812 பாடல்கைளத் தெலுங்குக்கு மொழிபெயர்ப்பித்னே. அவற்றைப் 12 பகுதிகளாகப் புத்தகங்களாக்கினேன்.

அம் மொழிபெயர்ப்புக்கு நிதி ஆதாரம் தருவதாக என்னை ஆட்கொண்டவர், அருள்மிகு பத்மாவதித் தாயார் உடனுறை வேங்கடேசப் பெருமான். அவரின் திருப்பாதங்களில் சேர்ப்பிக்குமாறு திருமலை திருப்பதி தேவத்தானத்தாருக்குப் 12 தெலுங்குப் புத்தகங்களை அனுப்பிய நாள் இன்று. எனவே இச்செய்திகளை எழுதுகிறேன்.

# தமிழ் மக்களுடைய உடனடி, நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண கிடைத்திருக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பம்!

**றுசாங்கன்**
**கோடீஸ்வரன்**

புதிய ஜனாதிபதி தெரிவு தொடர்பான குழப்பத்தில் நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் ஆழ்ந்திருந்தது.

ரணிலா, டலஸா என்ற கேள்விகளுடன் ஏராளமானவர்கள் நாடாளுமன்ற நேரடி ஒளிபரப்பை செவி மடுத்தபடி அந்தரித்துக்கொண்டிருந்தனர்.

எனக்கும் இதுபற்றிய குழப்பம் இருந்தாலும், இதற்காக நேரத்தைச் செலவிட வாய்ப்பிருக்கவில்லை.

நாடு தற்போதிருக்கும் சூழ்நிலையில் அதற்குத் தலைமையேற்று நாட்டை வழி நடத்தக்கூடிய ஒரே தலைவர் ரணில்தான் என்று, இலங்கையின் தற்போதைய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள்ளும், வெளிப்படையாக, முதன்முறையாக, தர்க்கரீதியான காரணங்களுடன், தீர்க்க தரிசனமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துவிட்டிருந்தபடியால், அப்ப டியே ஆகும் என்ற ஒரு நம்பிக்கை மனதில் வியாபித்திருந்தது.

இருந்தாலும், கிங் மேக்கர்ஸ் என்று எப்போதுமே தங்களை மார்தட்டிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட, பல கட்சிகளும் டலசுக்கே ஆதரவு என்று அறிவித்துவிட்டதால் சிறிய கலக்கம் மனதின் மூலையில் இல்லாமலும் இருக்கவில்லை.

நிலைமை மாறினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கை ஓங்கும். கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நீடிக்குமா என்ற குழப்பங்களும் மனதில் ஓடவே செய்தன. இருந்தாலும், பிரதானமாக ஒரு விவசாய மாவட்டமான கிளிநொச்சியில், நெல் அறுவடைக்கு அவசியமான டீசல் விநியோகம், பிந்தி விதைத்தோருக்கான உரத்தைப் பெற்று வழங்குதல் உள்ளிட்ட அவசர அவசிய பிரச்சினைகளைக் கையாள வேண்டி இருந்தமையால், வழமைபோன்று எனது ஒருங்கிணைப்புக்குழு மேலதிக இணைப்பாளராக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் என்னிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்புக்களை கையாள்வதற்காக அலுவலகம் சென்றுவிட்டேன்.

இவற்றுக்கு மேலதிகமாக, கோரக்கன் கட்டுப் பகுதியில் வறிய விவசாயிகளுக்கு கால் ஏக்கர்படி பகிர்ந்தளிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட காணிகளை ஒருசில வசதி படைத்தவர்கள் காணிப் பங்குகளைப் பெற்று விதைத்திருப்பதாக அந்தப் பகுதி விவசாயிகள் சிலர் ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் முறைப்பாடொன்றைக் கையளிப்பதற்காக என்னைச் சந்திப்பதற்கு வருவதாகக் கூறியிருந்தார்கள்.

இதற்கும் மேலாக, மாவட்ட அளவில் செயற்படும் பல கமக்கார அமைப்புக்கள் உரிய பொறுப்புடன் செயற்படவில்லை, பல அமைப்புக்களின் கணக்கறிக்கைகளே கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவில்லை, உண்மையான விவசாயிகளின் பிரச்னைகளை அவர்களோ, துறைசார்ந்த திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளோ கவனிப்பதில்லை என்ற நீண்ட முறைப்பாட்டுடன் மற்றுமொரு குழுவும் என்னைச் சந்திக்க வருவதாகக் கூறியிருந்தது.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவுக்கான வாக்களிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அங்கு என்ன நடக்கிறது என்பதில் கவனம் செலுத்த முடியாதபடி, ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் தம் குறைகளைக் கூறித் தீர்வுபெற வந்தவர்களுடன் பேசி விடயங்களைக் கையாள வேண்டியிருந்தது.

முன்னைய ஜனாதிபதி பதவி விலகியதுமே அவரது ஒருங்கிணைப் புக்குழு நியமனங்கள் செல்லுபடியாகுமா என்று ஏற்கனவே கிளிநொச்சியில் ஒரு சாரார் “அண்ணை எப்ப சாவார், திண்ணை எப்ப காலியாகும்“ என்பதுபோல் ஒரு பக்கம் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி தெரிவில் முடிவு மாறினால் நிலைமை தலைகீழாக மாறலாம். அந்த முடிவுக்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

எதுவும் நடக்கலாம் என்ற ஒரு நிலைமை இருந்தாலும், ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரின் அதிகாரம் தொடர்ந்தால், இந்த முறைப்பாடுகள் தொடர்பாக தீர விசாரித்து உண்மை நிலையைக் கண்டறிந்து பிரச்னைகளுக்கு உரிய தீர்வைக் காணலாம். அல்லாது போனாலும், அதிகாரம் இல்லையே என்று நியாயமான பிரச்னைகளைத் தீர்க்உகாமல் விட்டுவிட முடியுமா என்ன? நியாயம் இருப்பின் எப்படியும் தீர்ப்போம் என்ற உறுதிமொழியைச் சொல்லி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தம் குறைகளைக் கூறித் தீர்வுகாண வந்தவர்களை வழியனுப்பினேன்.

“இல்லை, ரணில்தான் வெல்வார் அண்ணை” என்று, அமைச்சரின் தீர்க்க தரிசனத்தையே தமது நிலைப்பாடாகவும் கூறிவிட்டு அவர்கள் விடைபெற்றுச் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் 134 வாக்குகளுடன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தியைக் கூறினார்.

இன்னும் சிலரும் தொடர்ந்து தொலைபேசி அழைப்புக்கள் மூலம் செய்தியை உறுதிப்படுத்தினர். சிலர் குறுந்தகவல் அனுப்பினர்.

சரி, தமிழ் மக்களின் பிரச்னைகளுக்ுத் தீர்வுகாணப் புறப்பட்ட ஆரம்பகாலப் போராளிகளின் ஒருவரான டக்ளஸ் தேவனாந்தா, தனது 28 வருட நாடாளுமன்ற பிரதிநிதித்துவ அனுபவத்துடனும், நீண்டகாலம் அமைச்சராக இருந்த தேர்ச்சியுடனும், அவரது தனித்துவமான கோட்பாடான தேசிய நல்லிணக்க அரசியல் வழிமுறையூடாக முன்கூட்டியே தீர்க்கதிரிசனமாக கட்டியம் கூறியமை நடந்தேறிவிட்டது என்ற திருப்தியுடன்,

அத்தகைய ஒரு ஆளுமையுடன் இணைந்து தமிழ் மக்களின் குறைகள் தீர்க்கும் வாய்ப்பு, “இராமர் பாலம் கட்டும்போது மணல் காவிய சிறு அணிலாக“ எனக்கும் கிடைத்திருப்பதையிட்ட மகிழ்வுடன், எனது பணிகளைத் தொடர்ந்தேன்.

2005ம் ஆண்டு புலிகளின் தேர்தல் புறக்கணிப்பின் மூலம் தோற்கடிக்கப் பட்டும், **(09 ஆம் பக்கம் பார்க்க)**

# இந்தியாவிற்கு அருகில் ஒரு கிளர்ச்சியா?



———— யதீந்திரா

ராஜபக்சக்களை அதிகாரத்திலிருந்து அகற்றுதல் என்னும் இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தென்னிலங்கை கிளர்ச்சியானது, சற்றும் எதிர்பாராத வகையில் உத்வேகத்துடன் தொடர்கின்றது. கிளர்சியாளர்களின் முதலாவது இலக்கு நிறைவேறிவிட்டது. ராஜபக்சக்களின் ராம்ராஜ்யத்தை சரித்துவிட்டனர். கோட்டபாயவின் வெளியேற்றத்துடன் ராஜபக்சக்களின் ஆட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனாலும் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்தும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். முதலில் கோட்டபாய ராஜபக்சவை இலக்கு வைத்து கிளர்ச்சியை ஒருங்கிணைத்தவர்கள் தற்போது, ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்து கிளர்ச்சியை தீவிரப்படுத்திவருகின்றனர். இதன் ஆரம்பக் கட்டமாகவே பிரதமர் அலுவலகத்தை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். தற்போது அவற்றிலிருந்து வெளியேறியிருந்தாலும் கூட, தங்களால் எவ்வேளையிலும் அரசாங்கத்தை முடக்க முடியுமென்பதே அவர்கள் கூறமுற்படும் செய்தியாகும். அவர்களின் அடுத்த இலக்கு நாடாளுமன்றமாகும்.

விடயங்களை தொகுத்து நோக்கினால், கிளர்சியாளர்களின் இலக்கு ராஜபக்ச ஆட்சியாளர்களை அகற்றுவது மட்டும்தானா அல்லது இலங்கைத் தீவின் அதிகாரத்தை முழுமையாக கைப்பற்றுவதா - என்னும் கேள்வி எழுகின்றது? ஏனெனில் கிளர்சியாளர்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் பல நடைமுறைக்கு சாத்தியமானவைகள் அல்ல. மாறாக, தற்போதுள்ள அரசியல் கட்டமைப்புக்கள் மூலம் நடைமுறைப்படுத்த முடியாதவை. இதனை தெரியாமல் முன்வைக்கின்றனரா அல்லது அரசியல் கிளர்ச்சியை தொடர்வதற்கான ஒரு உபாயமாக முன்வைக்கின்றனரா?

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் தென்னிலங்கை இரண்டு ஆயுத கிளர்ச்சிகளை கண்டிருக்கின்றது. 1971 மற்றும் 1989இல் ஜே.பி.வி இரண்டு முறை அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தது. 1971 கிளர்ச்சியை அடக்குவதற்கு அப்போதைய சிறிலங்காவின் தலைவர், சிறிமாவோ பண்டாரநாயக்க, இந்தியாவின் உதவியை நாடியிருந்தார். இந்தியாவின் உதவி இல்லாவிட்டால் ஜே.வி.பி கிளர்சியாளர்களை இராணுவ ரீதியில் அடக்க முடியாமல் போயிருக்கும். தோல்வியடைந்த ஜே.வி.பியினர் மீளவும் 1989இல், அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கிளர்சசியை முன்னெடுத்திருந்தனர். இதன் போது, இந்திய எதிர்ப்பே ஜே.வி.பியின் பிரதான இலக்காக இருந்தது. இரண்டு கிளர்ச்சிகளின் போதும் மோசமான தோல்வியை சந்தித்த, ஜே.வி.பி, பின்னர் தங்களை ஜனநாயகரீதியானதொரு கட்சியாக உருமாற்றிக்கொண்டது. ஜே.வி.பியினர், தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தங்களுக்கான செல்வாக்கை தக்கவைத்துக் கொள்வதில் ஆரம்பத்திலிருந்தே பிரதான கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர்.

இடதுசாரி சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட தலைமுறையைச் சேர்ந்தவர்களின் வழிகாட்டுதலில்தான் தற்போதைய கிளர்ச்சியும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. ஜே.வி.பி தலைவர் ருகுணு விஜயவீர தலைமையிலான சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட ஒரு தலைமுறையினரும் இதில் பிரதான பங்கு வகிக்கின்றனர். காலிமுகத்திடல், கோட்டா கோ கோம் எதிர்ப்பு அணியில் பல தரப்பினரும் இருந்ததாக சொல்லப்பட்டாலும் கூட, தற்போது இடம்பெற்றுவரும் கிளர்ச்சியில், முற்றிலும் இடதுசாரி சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர்களே பெருபான்மையாக இருக்கின்றனர். ஒரு வேளை கொழும்பு மைய சிவில் சமூகக் குழுக்களோ அல்லது அரசுசாரா நிறுவனங்களை சேர்ந்தவர்களோ இதில் முன்னணியில் இருந்திருந்தால், ரணிலால் அவர்களை இலகுவாக கையாண்டிருக்க முடியும். அத்துடன் அவ்வாறானவர்கள் இந்தளவிற்கு துனிகரமாக இதனை முன்னெடுக்கவும் மாட்டார்கள். கிடைக்கும் தகவல்களின்படி, இந்த கிளர்ச்சியின் பின்னாலிருப்பவர்களில், முதன்மையானவர்களாக, குமார் குணரட்ணம் தலைமையிலான முன்னிலை சோசலிச கட்சியை சேர்ந்தவர்களே இருக்கின்றனர். இதனை குமார் குணரட்ணமும் மறுக்கவில்லை அத்துடன், இடதுசாரி சிந்தனைகளை வரித்துக் கொண்டிருக்கும், அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியமும் பிரதான பங்குவகிக்கின்றது. பல தொழிற்சங்கங்களும் இதில் பங்கு வகிக்கின்றன. தென்னிலங்கை தொழிற்சங்கள் அனைத்துமே பெருமளவிற்கு இடதுசாரித்துவ அதே வேளை இந்திய எதிர்ப்பு சிந்தனைப் போக்குடையவையாகும். அதே வேளை ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றிருக்கும் ஒரு அணியினரும் இதன் பின்னாலிருக்கின்றனர். ஆனால் புரட்சிகர அரசியல் மூலம் அதிகாரத்தை கைப்பற்றுதல் என்னுமடிப்படையில் செயற்படக்கூடிய, அனுபமுள்ளவராக குமார் குணரட்ணமே இருக்கின்றார்.

தற்போது இடம்பெற்று வரும் கிளச்சியை எவ்வாறு புரிந்து கொள்வது என்பது முக்கியமானது. ஆரம்பத்தில் ராஜபக்சக்களை அகற்றுதல் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இப்போது அவர்கள் முன்வைத்திருக்கும் நிபந்தனைகள் எவையுமே ஆரம்பத்தில், அவர்களிடம் இருந்திருக்கவில்லை. ஆனால் இம்மாதம் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய பின்னர்தான், அவர்களில் சில மாற்றங்கள் தெரிந்தன. தங்களை தவிர்த்து அரசியல்வாதிகள் எவரும் இயங்க முடியாதென்னும் நிலைப்பாட்டிற்கு தாவினர். ஜனாதிபதி மாளிகை கிளர்சியாளர்களின் கைகளில் விழுந்ததை தொடர்ந்தே, கோட்டபாய ராஜபக்ச பதவி விலகும் முடிவை எடுத்திருந்தார். அதுவரையில், தனது பதவிக் காலம் முடியும் வரையில், தான் வெளியேறப் போவதில்லையென்னும் முடிவிலேயே இருந்தார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றியை தொடர்ந்து, கோட்டபா யவின் அனைத்து கனவும் கலைந்தது.

இந்த இடம்தான் கிளர்சியாளர்களுக்கு உற்சாகத்தை வழங்கியிருக்க வேண்டும். கோட்டபாயவை வெளியேற்றும் அவர்களின் முயற்சியின் போது இராணுவம் குறுக்கிடவில்லை. இத்தனைக்கும் விடுதலைப் புலிகளை போரில் தோற்கடித்த ஒரு இராணுவ வீரன் என்னும் தகுதியே கோட்டபாயவின் பலமாக இருந்தது. ஆனால் அவ்வாறான ஒருவருக்கு எதிராக, கிளர்ச்சியாளர்கள் ஒன்றுதிரண்ட போது, இராணுவம் அவரை காப்பாற்ற முயற்சிக்கவில்லை. தப்பியோடச் செய்வதன் மூலமே கோட்டபாய பாதுகாக்கப்பட்டார். கோட்டபாய தப்பியோடிமையானது, அதுவரையான கிளர்ச்சி நடவடிக்கை யில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

இடதுசாரிச் சிந்தனைகளின் வழியாக அதிகாரத்தை கைப்பற்றுதல் என்பது சோவியத் கால, உலக ஒழுங்கிற்குட்பட்ட ஒன்று. இலங்கைத் தீவில் இடம்பெற்ற சிங்கள மற்றும் தமிழ் ஆயுத கிளர்சிகளில் இடதுசாரி சிந்தனைகள் பெரியளவில் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. சோவியத் பாணி சோசலிச சிந்தனைகளின் வழியாகவே, ஜே.வி.பியானது, தென்னிலங்கையின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஆயுத கிளர்சியை முன்னெடுத்திருந்தது.

இதே போன்று, தமிழ் மக்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஆயுத விடுதலை இயக்கங்களில், விடுதலைப் புலிகள் மற்றும் டெலோ தவிர்ந்த இயக்கங்கள், தங்களை இடதுசாரிகளாகவே அடையாளப்படுத்திக் கொண்டனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் மற்றும் ஈரோஸ் ஆகியவை தங்களை இடதுசாரிகளாகவே அடையாளப்படுத்திக் கொண்டனர். விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் டெலோ ஆகியவை தங்களை கருத்தியல் அடிப்படையில் அடையாளப்படுத்தவில்லை. ஆனால், இங்கு குறிப்பிடப்பட்ட பிரதான இயக்கங்கள் அனைத்துமே, பிற்காலத்தில், இந்தியாவிடம் ஆயுதப் பயிற்சியை பெற்றுக்கொண்டன. இதற்கு பின்னர் இயக்கங்களின் மத்தியில் இடதுசாரி வலதுசாரி என்னும் பிளவுகள் கரைந்து போயின.

தென்னிலங்கையை பொறுத்தவரையில் இடதுசாரித்துவ செல்வாக்கு என்பது தொடர்ந்தும் இருந்துவருகின்றது. குறிப்பாக சிங்கள பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இடதுசாரித்துவ ஈர்ப்பு கணிசமான செல்வாக்கை பெற்றிருக்கின்றது. ஆனாலும் சிங்கள இடதுசாரித்துவத்தை சிங்கள பௌத்த தேசியவாதத்திலிருந்து பிரித்துப் பார்ப்பது கடினம். குறிப்பாக விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து ராஜபக்சக்களால் தலைமை தாங்கப்பட்ட சிங்கள பௌத்த தேசியவாதம் தென்னிலங்கையை முற்றிலுமாகவே ஆக்கிரமித்திருந்தது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக தற்போது சிங்கள பௌத்த தேசியவாதம் நெருக்கடியை சந்தித்திருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான், இடதுசாரித்துவ செல்வாக்கிற்குட்பட்ட மாணவர்கள் மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் மீளவும் முன்னணிக்கு வந்திருக்கின்றனர். இந்த பின்புலத்தில் தான் ஒரு கேள்வி எழுகின்றது - அதாவது, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கிளர்சியின் இலக்கு என்ன? 1971 மற்றும் 1989இல் ஜே.வி.பியால் முடியா மல் போனதை இவர்கள் மீளவும் புதியதொரு வழிமுறையால் சாதிக்க முற்படுகின்றனரா? இந்தியாவின் கொல்லைப் புறத்தில் இடம்பெறும் இவ்வாறான தொரு கிளர்ச்சி தொடர்பில் இந்தியா எதுவரையில் அமைதியாக இருக்க முடியும்?

இந்தியாவின் உடனடி அயல் நாடொன்றில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்புக்கள், இந்தியாவின் உள்ளக அரசியலிலும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியது. ஆனால் தற்போது ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சி எதுவரையில் செல்லும்? கிளர்ச்சியாளர்கள் அனைத்தையும் தங்கள் வசப்படுத்தினால், அது தெற்காசிய அரசியலில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்? அதே வேளை, இலங்கையின் ஆட்சியாளர்கள் அகற்றப்பட்டிருக்கும் முறைமையானது, தெற்காசியாவின் ஏனைய நாடுகளிலும் தொற்றலாம். இந்த நிலையில், இந்தியாவின் எதிர்வினை என்னவாக இருக்கப் போகின்றது? இலங்கையின் தென்பகுதியின் கிளர்ச்சியில் ஈழத் தமிழர்கள் பார்வையாளர்களாக மட்டுமே இருக் கின்றனர். இது பிறிதொரு செய்தியாகும்.



## தமிழ் மக்களுடைய...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அந்த முட்டாள்த்தனமான முடிவுக்கு சாமரம் வீசியதுபோல், இப்போதும் அவரைத் தோற்கடிப்போம் என்று "வெளிநாட்டு இராஜதந்திர தலையீடு" என்று புளுடா விட்டுச் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முடிவுகளையும் கடந்து,

52 மேலதிக வாக்குகளால் அமோக வெற்றியீட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கும்,

கப்பலை மூழ்கவிடாமல் காப்பாற்றி, வெற்றிகரமாக பயணத்தைத் தொடர்ந்தால்தான், கப்பலுக்குள் ஒரு பகுதியில் இருக்கும் தனது மக்களையும் காக்க முடியும் என்ற பரந்த சிந்தனையுடன், தனது இனத்தை மாத்திரமன்றி, ஒட்டு மொத்த இலங்கையர்களின் நலன்மீதும் அக்கறை கொண்ட ஒரு தேசியத் தலைவனாக பொறுப்புடன் இந்த வெற்றியை முன்கூட்டியே கட்டியம் கூறிய அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், மனமார்ந்த வாழ்த்துக்கள். சந்தர்ப்பங்கள் எப்போதும் கிடைக்காது.

இப்போது ஒரு அரிய சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்குக் கிட்டியிருக்கிறது.

கடந்த காலங்களில் கிடைத்த வாய்ப்புக்களையெல்லாம் உசுப்பேற்றும் அரசியல் பேச்சுக்களுக்குப் பின்னால் போய் கோட்டைட்டதுபோல் செயற் படாமல்,



இம்முறையேனும் இந்த (இறுதி?)ச் சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் இறுக்கமாகக் கைப்பற்றிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

22.07.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

22.07.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆரையம்பதி ஐ.ஓ.சியில் குழப்பம்

மட்டக்களப்பு, ஜூலை 22
தூர பகுதிகளில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்காக அரச திணைக்கள வாகனங்களில் கலன்கள் கொண்டு வரப்பட்டு, ஆரையம்பதி - தாழங்குடா லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகப்பட்டபோது குழப்பம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரனின் வேண்டுகோளுக்கு இணங்க, கடந்த 16ஆம் திகதி அரச உத்தியோகத்தர்களுக்காக குறித்த எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தவறுதலான புரிதலினால் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த பொதுமக்கள் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன், ஒரு சிலரால் அரச சொத்துகளான சில வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணையின்போதே, குறித்த சம்பவத்தின்போது பொது உடைமைக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் காத்தான்குடியை சேர்ந்த 32 வயது இளைஞனை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# ராஜபக்ஷ அரசாங்கத்தை பாதுகாக்கும் ஒருவராகவே செயற்படுவார் ரணில்!

## கூறுகின்றார் அரியநேத்திரன்



**மட்டக்களப்பு, ஜூலை 22**
**ஜனாதிபதி வாக்களிப்பில் பலர் டலஸ் அழகப்பெருமவை நம்பவைத்து ஏமாற்றியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

கோட்டபாய மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் நிழல் அரசாங்கம் பாராளுமன்றத்தில் இன்றும் உள்ளதாகவும் அதனை பாதுகாக்கும் ஒருவராகவே தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்க செயற்படுவார் எனவும் அவர் கூறினார்.

ரணில் விக்ரமசிங்க மீண்டும் கோட்டாபாயவை அழைத்து அவருக்கு ஒரு இடத்தை வழங்கி மீண்டும் முடிசூட வைத்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஹிஸ்புல்லா போன்றவர்கள் அமைச்சரவையில் வேண்டும்

## ஜனாதிபதி ரணிலிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 22
புதிய அமைச்சரவையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏம் ஏ.ஹிஸ்புல்லா உள்வாங்கப்பட்டு பலம்பொருந்திய அமைச்சுப்பதவி வழங்கப்பட வேண்டும் என அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா மத்தியகுழு அறிக்கையொன்றினூடாக புதிய ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கும் ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் உள்ள நெருக்கடிகளை தீர்ப்பதற்கு அரபு நாடுகளில் இருந்து இலங்கைக்கு பல கோடி ரூபாய் உதவி திட்டங்களை பெற்றுக் கொள்வதற்கு கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநராகவும், அமைச்சராகவும் இருந்த நீண்ட கால அரசியல் வரலாற்றை கொண்ட கலாநிதி எம்.எல். ஏம் ஏ.ஹிஸ்புல்லாவை மீண்டும் தேசியப்பட்டியலூடாக பாராளுமன்றத்திற்கு உள்வாங்கி முக்கிய அமைச்சர் பதவியில் அமர்த்தினால் இலங்கை நாட்டுக்கு பல கோடி ரூபாய் பணங்களை அரபு நாடுகளில் இருந்தும் ஏனைய நட்பு நாடுகளிடமிருந்தும் உதவியாக பெற்றுக் கொள்ள முடியும்.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாதான் அரசியல் அதிகாரத்திலிருந்த காலங்களில் பல கோடிக்கணக்கான பணங்களை இலங்கை நாட்டுக்கு உதவியாக பெற்று கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் தனது சேவையை வழங்கியுள்ளார். இனவாத, பிரதேசவாத அரசுக்கர்களை கொன்ற ஆட்சியாக மலரவிருக்கும் ஜனாதிபதி ரணிலை தலைமையாக கொண்ட இந்த அரசாங்கத்தில் கலாநிதி எம்.எல்.ஏம் ஏ.ஹிஸ்புல்லா போன்ற மொழியாற்றல், திறமை, நாட்டுப்பற்று மிக்கவர்கள் அமைச்சர்களாக அல்லது அதிகாரம் பொருந்தியவர்களாக இருக்கவேண்டியது நாட்டின் காலத்தின் தேவையாக அமைந்துள்ளது-என்றுள்ளது. (அ)

# மூன்று மாதங்களின் பின்னர் நேற்று எரிவாயு விநியோகம்

திருமலை, ஜூலை 22
சுமார் மூன்று மாதங்களுக்கு பின்னர் திருகோணமலை - தோப்பூர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்கு லிட்ரோ சமையல் எரிவாயு நேற்று விநியோகிக்கப்பட்டது.

தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 12 கிராமங்களைச் சேர்ந்தோருக்கு 750 சிலிண்டர்கள் தோப்பூர் அல் ஹம்றா மத்திய கல்லூரி மைதானத்தில் வைத்து இவ்வாறு விநியோகம் செய்யப்பட்டது.

தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவின் உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில், கடந்த மே மாதத்துக்கான மின்சார கட்டணப் பட்டியலின் பிரகாரம் சமையல் எரிவாயு விநியோகிப்பட்டது.

இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையில் வரிசை சரியாக இல்லையெனத் தெரிவித்து,சிறிய வாய்த்தர்க்கமும் இடம் பெற்றதை காணமுடிந்தது. (அ)



# மட்டக்களப்பில் நேற்று ஐ.தே.க. கொண்டாட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 22
ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக கடைமையை பொறுப்பேற்றதையொட்டி, ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மற்றும் முகாமையாளர் தலைமையிலான குழுவினர் பட்டாசு கொழுத்தியும் குளிர்பானம் வழங்கியும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.தே.கவின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வீ.கே. லிங்கராசா மற்றும் கட்சியின் மாவட்ட முகாமையாளர் எல். பிரதாப் தலைமையிலான குழுவினரே இவ்வாறு மட்டக்களப்பு நகரில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

ஆரையம்பதி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.மகேந்திரலிங்கம், மட்டக்களப்பு மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களான ரீ.சிவலிங்கம் மற்றும் பீ.சுரேஸ்குமார் ஆகியோர்கள் இதன்போது உடனிருந்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் அமைப்பாளரும், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமான திருமதி சசிகலா விஜயதேவா, தனது இல்லத்தின் வாயிலில் ஜனாதிபதிக்கான வாழ்த்துப் பதாகை தொங்கவிட்டு, வீதியில் பயணிக்கும் பொதுமக்களுக்கு குளிர்பானம் வழங்கினார். (அ)



# எரிவாயு விநியோகத்தில் முறைகேடு இடம்பெற்றால் உடன் அறிவியுங்கள்

## சம்மாந்துறை பிரதேச செயலர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 22
எரிவாயு விநியோகத்துக்கு பொதுமக்கள் எம்மோடு ஒத்துழைக்க வேண்டும். அப்போது தான் எங்களால் திறன்பட செயற்பட முடியுமென சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தெரிவித்தார்.

எரிவாயு விநியோகத்தை கிராம சேவகர் ஊடாக மேற்கொள்ள எடுத்த நடைமுறையில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தி குறித்து பிரதேச செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாடு முழுவதும் ஒரே விதமான பிரச்னைதான் ஓங்கியுள்ளது. இவ்விடயம் சம்மாந்துறையில் மாத்திரம் இடம்பெறவில்லை. எரிவாயு நெருக்கடி தீர்வு குறித்து இதுவரை அரசினால் எமக்கு எதுவும் கூறப்படவில்லை. இந்த எரிவாயு நெருக்கடி நிலைமையில் பிரதேச செயலகம் தலையிடாமல் விநியோகஸ்தர் மூலம் கொடுக்க முயன்றபோது பல பிணக்குகள் பொதுமக்களிடையே உருவாகியது. அதனாலேதான் கிராம சேவகருடாக விநியோகிக்க முடிவு செய்தோம்.

சுமார் 22,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழுகிற சம்மாந்துறை பிரதேசத்திற்கு குறைந்தளவு எரிவாயு விநியோகம் போதாதுள்ளது. இருப்பினும் நாட்டின் நிலைமையை கருத்திற் கொண்டு இத்திட்டத்தினை ஏற்படுத்தியுள்ளோம். எது எவ்வாறாயினும் மின்பட்டியலை கொடுக்கின்றமையால் குடும்பத்துக்கு ஒரு சிலிண்டரே வழங்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டால் அல்லது கிராம சேவகர்களினால் முறைகேடு இடம்பெற்றால் உடனடியாக எமக்கு அறியத்தரம். அவர்களுக்கு எவ்வித பாகுபாடுமின்றி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கின்ற அதே வேளை இத்திட்டத்திற்கு பொதுமக்கள் தங்களின் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்-என்றார். (அ)



## டைனோசர்களின் கால்தடங்கள் அதிகளவில் சிலியில் கண்டறிவு

சந்தியாகோ, ஜூலை 22

சிலி நாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட டைனோசர்களின் கால்தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பூமியில் மனித இனம் தோன்றுவதற்கு கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பெரிய உருவம் கொண்ட டைனோசர்கள் வாழ்ந்தன. விண்கல் மோதல் காரணமாக ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால், டைனோசர் இனம் மொத்தமாக அழிந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.


இத்தகைய டைனோசர்களின் தொல்லியல் எச்சங்கள் தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தற்போது சிலி நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள ஹூவாகோண்டோ என்ற சிறிய நகரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட டைனோசர்களின் கால்தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிலி மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 5 பேர் கொண்ட வல்லுநர் குழு ஆய்வு மேற்கொண்டபோது 3 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில், சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட டைனோசர் கால்தடங்களை கண்டுபிடித்தனர். இதுகுறித்து தொல்லியல் நிபுணர் கிறிஸ்டியன் சலாசர் கூறும்போது, "எனது தொழில் முறை அனுபவத்தில் இது உண்மையிலேயே முன்னோடியில்லாத ஒன்று. 10 நாட்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்தடங்களை கண்டுபிடித்தோம். இங்கு மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இது ஒரு சிறந்த திட்டத்தின் தொடக்கமாகும்" என்று தெரிவித்துள்ளார்.

## உணவு நெருக்கடியைத் தீர்க்க பொருளாதார தடையை நீக்குக!

### ரஷ்ய ஜனாதிபதி புடின் வலியுறுத்து

தெஹ்ரான், ஜூலை 22




உணவு நெருக்கடியை தீர்ப்பதற்கு ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை நீக்க வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்மீதான படையெடுப்பைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள், ரஷ்ய மீது ஏராளமான பொருளாதார தடைகளை விதிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைனில் உற்பத்தி செய்யப்படும் தானியங்களின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்ய தானிய ஏற்றுமதிகளுக்கும் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால், சர்வதேச உணவு சந்தைகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் உணவு நெருக்கடியை தீர்க்க ரஷ்யாமீதான தடைகளை நீக்க வேண்டும் என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்மீதான போருக்கு பிறகு புதின் முதல் முறையாக வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அவர் ஈரான் தலைநகர் தெக்ரானுக்கு சென்றார். அங்கு ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி, துருக்கி அதிபர் எர்டோகன் ஆகியோரை சந்தித்து பேசினார்.

அங்கு பேசிய அவர், உக்ரைனிய தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கு நாங்கள் உதவுவோம். ஆனால், ரஷ்ய தானிய ஏற்றுமதிக்காக விமான விநியோகம் தொடர்பான அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்பட வேண்டும்.

உலக சந்தைகளுக்கு ரஷ்ய உரங்களை வழங்குவதற்கான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளனர். அது போன்று சர்வதேச உணவு சந்தைகளில் நிலைமையை மேம்படுத்த அவர்கள் உண்மையாக விரும்பினால் ரஷ்ய தானியங்களின் ஏற்றுமதி மீதான தடையை மேற்கத்திய நாடுகள் நீக்க வேண்டும். உலகில் இருந்து ரஷ்யாவை தனிமைப்படுத்த விரும்பும் மேற்கத்தைய நாடுகளின் முயற்சி, சிறிது அளவு கூட சாத்தியமற்றது - என்றார்.

# பற்றியெரிகின்றது ஐரோப்பா கண்டம்!

- கிரீஸ், இத்தாலி, ஸ்பெயினில் தீ
- போர்த்துக்கல்லில் 1,000 பேர் பலி
- ஸ்பெயினில் 500 பேர் உயிரிழப்பு

லண்டன், ஜூலை 22



ஐரோப்பா முழுவதும் காட்டுத் தீ பரவி வருகின்றது. இதனால், கண்டம் முழுவதும் வெப்ப அலை வறட்சி தீவிரமாகியுள்ளது.

இதனிடையே, பிரான்ஸ், இங்கிலாந்தில் வெப்பநிலை குளிர்ச்சியடைந்தாலும் கிறீஸ், ஸ்பெயின், இத்தாலியில் காட்டுத் தீ பரவல் அதிகரித்துள்ளது. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கக் கடுமையாகப் போராடி வருகின்றனர்.

ஜேர்மனியில் ஆறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளது. இதனால், அவற்றின் வழியான போக்குவரத்து பெரும் சிரமமாக மாறியுள்ளது.

இதேநேரம், வெப்ப அலையின் தாக்கத்தால் போர்த்துக்கல்லில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ஸ்பெயினில் 500 வரையானவர்கள் மரணமாகினர்.

கிரீஸில் தலைநகர் ஏதென்ஸின் வடகிழக்கு பகுதியிலுள்ள பென்டெலி மலையில் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தீயை அணைக்க ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுவதால் தீயை அணைப்பது பெரும் கடினமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

30ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் கிரீஸின் கொராக் காஸ் பகுதியிலிருந்து நூற்றுக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிரான்ஸின் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி தீ கட்டுக்குள் வந்துள்ளது. இதைத் தொடர்ந்து அங்கு வெப்ப அலை குறைந்துள்ளது. நேற்றுமுன்தினம் 40 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை குறைந்தது.

பிரான்ஸில் 5,600 ஹெக்ரெயர் (13,800 ஏக்கர்) காட்டு நிலம் எரிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனயில் வெப்ப அலை தாக்கி வருகிறது. அங்கு 38 பாகை செல்சியஸ் வெப்பநிலை நீடிக்கிறது. எனினும், கனமழை மற்றும் கடும் காற்று, ஆலங்கட்டி மழை பெய்யும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பிரிட்டன் பிரதமருக்கான போட்டி; இந்தியரான ரிஷி சுனக் முன்னிலை!

லண்டன், ஜூலை 22

பிரிட்டனின் அடுத்த பிரதமர் மற்றும் ஆளும் பழமைவாத கட்சித் தலைவர் பதவிக்கான இறுதிப் போட்டியில், இந்திய வம்சாவழி ரிஷி சுனக் மற்றும் வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸ் மோதவுள்ளனர்.

பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தனது பதவிகளிலிருந்து விலகியமையைத் தொடர்ந்து ஆளும் பழமைவாத கட்சி தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடந்து வருகிறது. கட்சித் தலைவராகத் தெரிவாகும் நபரே பிரதமர் பதவியை ஏற்க முடியும்.

கடந்த சில வாரங்களாக நடந்து வரும் இத்தேர்தலில், முதலில் 8 பேர் போட்டியிட்டனர். ஒவ்வொரு சுற்றிலும் குறைந்த வாக்குகள் பெறுவோர் வெளியேற்றப்பட்டு வந்தனர். இதன்படி, நான்காம் கட்ட தேர்தல் திங்களன்று நடந்தது.

இதன் இறுதியில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த, முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக், கூடுதலாக மூன்று வாக்குகள் பெற்று, 118 வாக்குகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் இருந்தார்.

வர்த்தக அமைச்சர் பென்னி முர்டான்ட் 10 வாக்குகள் கூடுதலாக பெற்று, 92 வாக்குகளுடன் இரண்டாம் இடத்தில் இருந்தார். வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸ், யாரும் எதிர்பார்க்காத வகையில் 15 வாக்குகள் கூடுதலாக பெற்று, 86 வாக்குகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இந்நிலையில், செவ்வாயன்று நடந்த ஐந்தாம் மற்றும் கடைசி கட்டத் தேர்தலில் மேலும், 19 வாக்குகளை மேலதிகமாகப் பெற்று, மொத்தம், 137 வாக்குகளுடன் ரிஷி சுனக் முதலிடத்தைப் பிடித்துள்ளார். முந்தைய சுற்றில், 86 வாக்குகளுடன் மூன்றாம் இடத்தில் இருந்த லிஸ் டிரஸ், 113 வாக்குகளுடன் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். பென்னி மிர்டான்ட், 105 வாக்குகளுடன் வெளியேறினார்.

இதையடுத்து, இறுதிப் போட்டியில் ரிஷி சுனக் மற்றும் லிஸ் டிரஸ் மோதவுள்ளனர். கட்சியின், 1.60 இலட்சம் தொண்டர்கள் வாக்களித்து கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்தவர். இதற்கான தேர்தல் செப்ரெம்பர் 5ஆம் திகதிக்குள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஐ)

## பிரிட்டனையும் விடாத பணவீக்க அதிகரிப்பு!

லண்டன், ஜூலை 22

பிரிட்டனில் எரிபொருள், உணவு பொருட்கள் விலை உயர்வால், பணவீக்கம் 40 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு உயர்ந்துள்ளது. நுகர்வோர் விலை குறியீடு, மே மாதம் 9.1 சதவீதமாக இருந்த நிலையில், ஜூனில் 9.4 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு தேசிய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

உக்ரைன் போர், கோவிட் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர், பல நாடுகளில் பணவீக்கம் பல பத்தாண்டுகளைவிட உச்சபட்சமாக அதிகரித்துள்ளது. இது வட்டி விகிதங்களை உயர்த்த மத்திய வங்கிகளை கட்டாயப்படுத்தியுள்ளது. அதிக வட்டி விகிதம், வணிக நிறுவனங்களையும், நுகர்வோரையும் பாதிக்குமென்பதால் மந்தநிலைக்கு இட்டு செல்லும் அபாயமுள்ளது.

அன்றாட வாழ்க்கை செலவு அதிகரிப்பாலும், பிரிட்டனின் பொருளாதாரம் நெருக்கடியில் உள்ளது. பணவீக்கத்தை கட்டுப்படுத்த ஒகஸ்டில் நடக்கும் வங்கி கொள்கை கூட்டத்தில், இங்கிலாந்து வங்கி து வட்டி விகிதத்தை 50 அடிப்படை புள்ளிகள் அல்லது 0.5 சதவீதம் உயர்த்த கூடுமென கூறப்படுகிறது.

## ஹைபர்சொனிக் ஏவுகணையை பரிசோதித்தது அமெரிக்கா!

வாஷிங்டன், ஜூலை 22

ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் பயணிக்கவல்ல ஹைபர் சொனிக் ஏவுகணையை அமெரிக்கா சோதனை செய்துள்ளது.

இது தொடர்பாக அந்த நாட்டின் இராணுவ தலைமையகமான பென்ரகன் கூறும்போது,

"ஹைப்பர்சொனிக் ஏவுகணையை சோதனை செய்து பார்க்கப்பட்டது. இது வெற்றிகரமாக அமைந்தது. 2013ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட 3ஆவது ஹைபர் சொனிக் ஏவுகணை இதுவாகும்" என்று தெரிவித்துள்ளது. ஹைபர் சொனிக் ஏவுகணை ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்லக்கூடியது. இந்த வகை ஏவுகணைகள் வளி மண்டலத்தில் உள்ள காற்றை உறிஞ்சி கூடுதல் உந்து சக்தியை பெருக்கும் ஆற்றல் கொண்டவை.

# அயர்லாந்தை வீழ்த்தியது நியூசிலாந்து அணி



பெல்பாஸ்ட், ஜூலை 22

பெல்பாஸ்டில் நடந்த இரண்டாவது இருபது - 20 போட்டியில் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்துக்கு எதிராக வெற்றி பெற்றது நியூசிலாந்து.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு டேன் கிளீவர் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்கள் எடுத்தார். பின் அலன் 35 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்களைப் பெற்றது.

அயர்லாந்தின் பந்துவீச்சில் மார்க் அடயர், கிரேக் யங் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 180 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு அடேர் 27 ஓட்டங்களை மெதுவாகப் பெற்றார். இதனிடையே நியூசிலாந்தின் பந்துவீச்சில் இஸ்சோதி, மைக்கல் பிரேஸ்வெல் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

இதனால், அயர்லாந்து அணி 91 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

தொடரின் இறுதிப் போட்டி இரு அணிகளும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)



# மீண்டும் வருகிறார் வீனஸ் வில்லியம்ஸ்

நியூயோர்க், ஜூலை 22

உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனைகளில் ஒருவரான வீனஸ் வில்லியம்ஸ் மீண்டு விளையாட வருகிறார்.

ரொறன்ரோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலக ரென்னிஸ் சங்கத்தின் போட்டியில் ஒற்றையர் பிரிவில் அவர் பங்கேற்பார்.

வீனஸ் வில்லியம்ஸ் ஏறக்குறைய ஒரு வருடமாக ஒற்றையர் பிரிவு போட்டியில் விளையாடவில்லை. கடந்த விம்பிள்ன் போட்டியில் இரட்டையர் பிரிவில் அவர் விளையாடியிருந்தார்.

ரொறன்ரோ ஓப்பன் தொடர் வரும் 6ஆம் திகதி தொடங்குகிறது. இதில், 42 வயதான வீனஸ் வில்லியம்ஸ் விளையாடுவார். (ஐ)

# உலக செஸ் சம்பியன்ஷிப் விலகினார் கார்ல்ஸன்!

ஒஸ்லோ, ஜூலை 22

உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்க போவதில்லை என மோக்னஸ் கார்ல்ஸன் தெரிவித்துள்ளார். செஸ் விளை யாட்டின் முக் கிய போட்டியான உலக செஸ் சம்பியன்ஷிப்பில் இது வரை 5 முறை பட்டத்தை வென்றவர் நோர்வேயை சேர்ந்த மோக்னஸ் கார்ல்ஸன்.



செஸ் உலகின் முதல் நிலை வீரரான இவர் மிகக் குறுகிய வயதிலேயே கிராண்ட் மாஸ்டரானவர்.

இந்நிலையில், தற்போது அடுத்தாண்டு (2023) நடைபெற உள்ள உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க போவதில்லை என அறிவித்துள்ளார்.

மேலும், தனிப்பட்ட முடிவின் காரணமாகவே போட்டியிலிருந்து விலகுகிறார் என்றும் இதுகுறித்து நிர்வாகத்திடம் முறையாக அறிவித்து விட்டாரெனவும் கார்ல்சன் தெரிவித்துள்ளார்.

# முப்பாய்ச்சலில் 3ஆவது தங்கம் வென்றார் யூஜின்



உலக தடகள சம்பியன்ஷிப்பில் ஒலிம்பிக் சம்பியனான வெனிசுலாவின் யூலிமர் ரோஜாஸ், முப்பாய்ச்சலில் தொடர்ச்சியாக 3ஆவது முறையாக தங்கப் பதக்கம் வென்றார்.

அமெரிக்காவின் யூஜின் நகரில் உலக தடகள சம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான முப்பாய்ச்சலில் வெனிசுலாவின் யூலிமர் ரோஜாஸ் 15.47 மீற்றர் தூரம் தாண்டி தங்கப் பதக்கம் வென்றார்.

2017 மற்றும் 2019ஆம் ஆண்டுகளிலும் அவர், தங்கம் வென்றிருந்தார். ஜமைக்காவின் ஷானிகா ரிக்கெட்ஸ் 14.89 மீட்டர் தூரம் தாண்டி வெள்ளிப் பதக்கமும், அமெரிக்காவின் டோரி பிராங்ளின் 14.72 மீற்றர் தூரம் தாண்டி வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

# தோழியை காதலிக்கிறாராம் பிரபல ரென்னிஸ் வீராங்கனை!

மொஸ்கோ, ஜூலை 22

பிரபல ரென்னிஸ் வீராங்கனை டாரியா, தோழி நடாலியா ஜாபியாகோவை காதலிக்கிறார் என்று வெளிப்படையாக அறிவித்து இருக்கிறார்.

ரஷ்யாவை சேர்ந்தவர் டாரியா கசட்கினா. இவர் சமீபத்தில் நடந்து முடிந்த பிரெஞ்சு ஓப்பன் தொடரில் அரையிறுதி போட்டி வரை முன்னேறியவர். இந்த நிலையில் இவர் தற்போது தனது தோழி நடாலியா ஜாபியாகோவை காதலிப்பதாக வெளிப்படையாக அறிவித்து இருக்கிறார்.

ஒரே பாலினத்தை சேர்ந்த இருவர் திருமணம் செய்து கொள்ள பல நாடுகள் சட்டபூர்வமாக அனுமதி அளித்துள்ளன. இருப்பினும் சில நாடுகளில் இதற்கான தடைகள் தொடர்கின்றன. ரஷ்யாவில் ஒருபால் காதலுக்கு எதிராக 2013 ஆம் ஆண்டு முதல் கடுமையான சட்டங்கள் உள்ளன.

தற்போது அதை விரிவுபடுத்தும் முயற்சியில் சட்டம் இயற்றுபவர்கள் ஈடுபட்டுள்ளனர். இது குறித்த தனது நாட்டின் அணுகுமுறையையும் அவர் விமர்சித்துள்ளார். மேலும் பேசிய அவர், "பிறருக்காக மறைவில் வாழ்வது அர்த்தமற்றது. நாம் நிம்மதியாக வாழ்வது மட்டுமே முக்கியம். விளையாட்டு துறைகளில் இருப்ப வர்கள் மற்றும் செல்வாக்கு மிக்கவர்கள் இது பற்றி பேசுவது முக்கியம் என்று நான் நம்புகிறேன்." என தெரிவித்தார்.



டாரியா தான் காதலித்து வரும் தோழியின் புகைப்படம் ஒன்றையும் தனது அதிகாரபூர்வ இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இருவரும் எடுத்துக்கொண்ட அந்த புகைப்படம் தற்போது சமூக வலை தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமனம்

கொழும்பு, ஜூலை 22
ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயத்தை ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற வளாகத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமன் ஏக்கநாயக்க இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# ராஜபக்ஷர்களின் நிர்வாகத்துக்குள் நாட்டைக் கொண்டு வர முயற்சி!

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 22
நாட்டின் எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரணில் ஆட்சியில் இருக்கும் வரை மீண்டும் அனைவரும் ஒன்றுகூடிப் போராட்டத்தை ஆரம்பித்து அவரை வெளியேற்றுவோம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் விலைபோய் தற்போதைய ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளதுடன், மீண்டும் ராஜபக்ஷர்களின் நிர்வாகத்திற்குள் நாட்டை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# மக்கள் கருத்துக்கும் பாராளுமன்றத்தின் வாக்குவீதத்திற்குமிடையே இடைவெளி

## புபுது ஜயகொட கூறுகிறார்

கொழும்பு, ஜூலை. 22
பாராளுமன்றத்தில் வாக்கு சதவீதத்துக்கும் வெளியில் உள்ள மக்களின் கருத்துக்கும் இடையில் பல ஒளி வருட இடைவெளி இருப்பதாக சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் மக்கள் சக்தி என்பது 69 இலட்சம் வாக்குகளையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தையும் பெற்றிருந்த கோட்டாபய ராஜபக்ஷவை பதவி நீக்கம் செய்யப் பயன்படுத்தப்பட்டது.

225 பராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பது ஜனாதிபதித் தேர்தலில் தெளிவாக நிரூபணமாகியுள்ளது.

பாராளுமன்றத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் கருத்து, அரசியல் அபிலாஷைகளை சிறுமைப்படுத்தியுள்ளது. பாராளுமன்றத்திற்கு வெளியே 200 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் கேள்விகள் மற்றும் குறைகள் உள்ளன.

நீண்ட காலமாக நாட்டு மக்களுக்கு பாராளுமன்றத்தின் மீது நம்பிக்கை இல்லை. பிரச்னைகளை தீர்க்க போராட்டம் செய்யவேண்டியுள்ளது- என்றார். (அ)

# பிரதமர் பதவிக்கு நால்வரின் பெயர்

கொழும்பு, ஜூலை22
ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கீழ் பிரதமர் பதவியை வகிக்க நால்வரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஒருவரின் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, தினேஷ் குணவர்தன, விஜேதாஸ ராஜபக்ஷ, சரத் பொன்சேகா மற்றும் சுசில் பிரேம ஜயந்த ஆகியோரின் பெயர்கள் பிரதமர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ)

# கோட்டாபய ராஜபக்ஷவுக்கு குறுகியகால பயண அனுமதி மட்டுமே வழங்கப்பட்டது

## சிங்கப்பூர் குடிவரவு அதிகார சபை

கொழும்பு, ஜூலை. 22
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனிப்பட்ட விஜயமாக சிங்கப்பூருக்கு வந்ததாகவும் அவருக்கு குறுகிய கால பயண அனுமதி மட்டுமே வழங்கப்பட்டது என சிங்கப்பூர் குடிவரவு மற்றும் சோதனை சாவடிகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்துள்ள சிங்கப்பூர் குடிவரவு அதிகார சபை, இலங்கையில் இருந்து சிங்கப்பூருக்கு வரும் பயணிகளுக்கு பொதுவாக 30 நாட்களுக்கு விஸா வழங்கப்படும் என கூறியுள்ளது.

30 நாட்களுக்கு மேல் சிங்கப்பூரில் தங்கி இருக்க விரும்புவோர் விஸா நீடிப்புக்கான விண்ணப்பத்தை இணையத்தளம் வழியாக மேற்கொள்ள முடியும். விண்ணப்பங்களை ஆராய்ந்து அதனடிப்படையில் மேலதிக காலம் தங்கி இருக்க விஸா வழங்கப்படும் எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



## திருமதி பிரபாஜினி ஸ்ரீஸ்கந்தராஜா

**மலர்வு** **20 - 04 - 1978**

**உதிர்வு** **14 - 07 -2022**

ஏழாலை வடக்கு, ஏழாலையை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டினை வதிவிடமாகவும் கொண்ட அமரர் திருமதி பிரபாஜினி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் 14.07.2022 வியாழக்கிழமை அதி காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகமணி சின்னாச்சி மற்றும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி சிவராசா சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்ற திரு நா.குமாரசாமி திருமதி கருணாநிதி (ஏழாலை) தம்பதியினரின் மூத்த புதல்வியும் ஆவார். அன்னார் திரு.க.ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு துணைவியும் பவீன், பவீஷ் ஆகியோரின் ஆருயிர் தாயாரும் காலஞ்சென்ற திரு.கனகலிங்கம் திருமதி சரஸ்வதி (பரஞ்சோதி - அளவெட்டி) தம்பதியினரின் இளைய மருமகளும் ஆவார். பிரியா (ஆசிரியை - ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்) பிரதீபன் (இலண்டன்) பிரதீப் (இலண்டன்) மனோஜ் (இலண்டன்) பிரலீபா (ஏழாலை) ஆகி யோரின் அன்புச் சகோதரியும் அமரர் நாகம்மா, மனோகரியம்மா, அமரர் தவகுலசிங்கம், ஜெயகுலசிங்கம், புவிந்திரசிங்கம், நேச குலசிங்கம், ஆகியோரின் மருமகளும் அமரர் பாலசுந்தரம், அமரர் திருநாவுக்கரசு, தங்கராணி, சிறிராணி ஆகியோரின் பெறாமகளும் ஆவார். பிரபாகரன் (நூலகர், பொதுநூலகம் தெல்லிப்பளை) சுவேரகா (இலண்டன்) துஷாந்தி (இலண்டன்) தயாழினி (சித்தங்கேணி) தனீஸ் (கொழும்பு) ஸ்ரீவிக்னராஜா (நீர்கொழும்பு) கலைவாணி (அளவெட்டி) சுலோச்சனா (ஆசிரியை - எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மேரிகெலன் (நீர்கொழும்பு) இராஜேஸ்வரன் (அளவெட்டி) சிவனேந்திரன் (மிருசுவில்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார். ஜீவிகா, சிந்துஷன், சந்தோஷ், அதீஸ் ஆகியோரின் பாச மிகு பெரியம்மாவும் பவீசன், அதிபன், மதீஷ், நிரோஷன், சிவானுஜன், சிவகாருஷன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விதுஷனின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் “Le Funerarium” 95, rue Marcel Sembat, 93430Villetaneuse, (Tel:01 48 26 05 80) எனும் இடத்தில் எதிர்வரும் 25.07.2022 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 14.30 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம்

25.07.2022 திங்கட்கிழமை மு.ப 11.00 மணி - இறுதிக் கிரி யைகள் ஆரம்பமாகும்.

மதியம் 13.30 மணி தொடக்கம் 14.20 மணி வரை உறவுகளின் இறுதி அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்படும்.

பி.ப 14.30 மணிக்கு இறுதி அஞ்சலியுடன் பூதவுடல் சிவாக்கி னியுடன் தகனம் செய்யப்படும்.

| தொடர்புகளுக்கு : | | |
|---|---|---|
| | **கு.கருணாநிதி, ஏழாலை** | : 0764851221 |
| | **க.சரஸ்வதி, அளவெட்டி** | : 0776468394, 0763045541 |
| | **க.ஸ்ரீஸ்கந்தராஜா, பிரான்ஸ்** | : +33782987990 |
| | **கு.பிரதீபன், இலண்டன்** | : +447453296011 |
| | **கு.பிரதீப், இலண்டன்** | : +447475470535 |
| | **கு.மனோஜ், இலண்டன்** | : +447450258558 |

தகவல்:
**திருமதி கு.கருணாநிதி.**
*ஏழாலை வடக்கு, ஏழாலை.*

## 8 ஆவது...

காலை வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன வரவேற்றார்.

இதனையடுத்து, முற்பகல் 10.10 மணி யளவில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில், இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ரணில் விக்ரமசிங்க மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவியை வகித்துவரும்போதே மக்களின் எதிர்ப்பை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகினார்.

இதனைத் தொடர்ந்து அரசியலமைப்புக்கு அமைய பிரதமராக பதவி வகித்து வந்த ரணில் விக்ரமசிங்க கடந்த 14ஆம் திகதி பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

பதில் ஜனாதிபதியாக செயற்பட்ட ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பின்போது, 134 வாக்குகளை பெற்று புதிய ஜனாதிபதியாக தெரிவானார். அவரை எதிர்த்து போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும 82 வாக்குகளையும், அநுர குமார திஸாநாயக்க 3 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

ஒன்பதாவது பாராளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரணில் விக்ரமசிங்க கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டார்.

*1949ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி பிறந்த ரணில் விக்ரமசிங்க கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பிரதமராகப் பதவி வகித்தார்.*

*1970 ஆம் ஆண்டு களனி தொகுதி ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளராக தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், பின்னர் பியகம தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.*

*1977 ஆம் ஆண்டில் முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர், ஜே.ஆர். ஜயவர்தன அரசின் அமைச்சரவையில் இளம் அமைச்சராக இருந்ததுடன் இளைஞர் விவகாரம் மற்றும் தொழிற்துறை அமைச்சராக அவர் அப்போது கடமையாற்றினார்.*

*28 வயதில் வெளிவிவகார பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், பின்னர் இளைஞர் விவகாரம், கல்வி மற்றும் தொழில், விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் போன்ற அமைச்சரவை அமைச்சு பதவிகளை வகித்தார்.*

*1989 ஆம் ஆண்டு மார்ச் 06 முதல் 1993 ஆம் ஆண்டு மே மாதம் 7 வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற சபை முதல்வராக பணியாற்றிய ரணில் விக்ரமசிங்க 1994 முதல் 2001 வரை மற்றும் 2004 முதல் 2015 வரை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்திருந்தார்.*

*அவர் முதன்முறையாக 1993 ஆம் ஆண்டு மே மதம் 07 ஆம் திகதி பிரதமராக தெரிவு செய்யப்பட்டதுடன் 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 19 ஆம் திகதிவரை அந்த பதவியை வகித்தார். அவர் ஆறு தடவைகள் பிரதமராக கடமையாற்றியிருந்தார்.*

*1982 இல் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் ஜே.ஆர். ஜயவர்தன வெற்றி பெற்றார்.*

*1988 இல் நடைபெற்ற 2 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் ரணசிங்க பிரேமதாஸ வெற்றி பெற்று, 2 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்றார்.*

*1993 இல் பிரேமதாஸ கொல்லப்பட்ட பின்னர், ஐ.தே.க. ஆட்சியில் பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க, பாராளுமன்றம் ஊடாக - வாக்கெடுப்பின்றி, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவர் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்.*

*அதன்பின்னர் 1994, 1999, 2005, 2010 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர்களே வெற்றி பெற்றனர்.*

*ஐ.தே.கவின் ஆசியுடன் 2015 இல் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார். எனினும், அவர் ஐ.தே.கவின் அங்கத்துவத்தை பெறவில்லை. சுதந்திரக்கட்சி உறுப்பினராகவே செயற்பட்டார்.*

*2019 இல் மொட்டு கட்சி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றார். 2005 இற்கு பிறகே 2019 இல்தான் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார் (சஜித்).*

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதால், பாராளுமன்றம் ஊடாக 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு 134 எம்.பிக்களின் ஆதரவு கிட்டியது. *சுமார் 29 ஆண்டுகளுக்கு பிறகு ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.* (அ)

## ஜி.எல்.பீரிஸ்,...

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்கும் கட்சியின் தீர்மானத்தை மீறியதற்காக பொதுஜன பெரமுனவின் முக்கியமான இருவருக்கு எதிராக ஒழுங்காற்று விசாரணையை தொடங்கவுள்ளதாகவும் அவர்களை அப்பதவிகளில் இருந்து நீக்குவதற்கும் அக்கட்சி தீர்மானித்துள்ளது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் பொருளாளர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஒருவர் எமது இணையத்தளத்துக்கு தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டமை மற்றும் கட்சி விதிகளை மீறி விமர்சித்தமை தொடர்பாக டலஸ் அழகப்பெரும மீது குற்றம்சாட்டப்படவுள்ளது.

டலஸ் அழகப்பெருமவுக்கு தனது ஆதரவை வெளியிட்ட குற்றச்சாட்டையும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எதிர்கொள்வார்.

இரு முக்கிய பிரமுகர்களான ஜி.எல். பீரிஸ் மற்றும் அழகப்பெரும ஆகியோர் கட்சியில் இருந்தும் நீக்கப்படலாம் என்றும் அந்த பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நெருக்கடிக்கு...

இதனை கூறியுள்ளது.

ரணில் விக்ரமசிங்க இன்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுடன் கூடிய அனைவரும் அடங்கிய அரசாங்கத்தை அமைக்க இது வழிவகுக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்த்துள்ளது.

இலங்கைக்கு வேகமான பொருளாதார மறுசீரமைப்பு தேவைப்படுகிறது. அத்துடன் தனிநபர் சுதந்திரம் மற்றும் நல்லிணக்க முயற்சிகளைப் பாதுகாத்தலும் அவசியம்.

இலங்கை மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவு தொடர்பில் நம்பிக்கை வைக்க முடியும் எனவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு தனது ருவிட்டர் செய்தியில் கூறியுள்ளது. (அ)

## சர்வதேச...

கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை, நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதிப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## பொதுமக்களின்...

நாட்டின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சந்திரிகா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ முகநூல் பக்க பதிவொன்றின் மூலம் இவ்வாறு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கும் வகையில் புதிய ஜனாதிபதி செயற்படுவார் என தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

## டலஸ்க்கு...

டுள்ள ஒரு கட்சியாக நாம் இருக்கும் போது, தந்திரோபாயமற்ற பொறுப்பற்ற தன்னிச்சையான செயற்பாடுகள் விபரீதத்தை ஏற்படுத்தி இருக்கின்றன எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெற்ற போது அங்கு சென்ற டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் எழுத்து மூலம் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. நான் அந்த நிகழ்வுக்கு போக முடியவில்லை. இந்த விடயம் இரவோடு இரவாக ஊடகங்களுக்கு செய்திகளாகச் சென்றிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கின்ற நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாகப் பிளவுபட்டு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடன்பாட்டை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று செய்தியை இரவில் தெரியப்படுத்தும் நிலை உருவானது.

இது பாரதூரமான நிலைமை. அவ்வாறு உடன்பாடு ஏற்பட்டிருந்தால் அதனை வெற்றி பெற்றதற்கு பின்னர் வெளியிட்டிருக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அது தெரிந்தால் போதுமானது. அதற்கிடையில் அதனை வெளியே கூறியதை ஏற்கமுடியாது. இதன் காரணத்தினாலும் எதிர்பாராத தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தியா நிர்ப்பந்தித்துத்தான் ரணிலுக்கு எதிரான தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்ற கருத்து அங்கு பேசப்பட்டு இருக்கின்றதென தகவல் வெளியாகியுள்ளது.

அதனுடைய உண்மை எனக்கு தெரியாது. எதுவாக இருந்தாலும் அவ்வாறு இந்தியாவின் பெயரை உச்சரித்து அந்த தீர்மானத்தை எடுத்ததை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன். இது இராஜதந்திரமற்ற மூலோபாயமற்ற விடயம் என்பதுடன் ஒரு பிரச்னையை உருவாக்கி இருக்கின்றது. இவ்வாறான செய்திகள் காரணமாக பலர் என்னுடன் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு செய்தி வெளியான நிலையில் மறுநாள் காலையில் அவ்வாறான எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரனின் பெயரில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இவை எல்லாம் தந்திரோபாயமற்ற பொறுப்பற்ற செயல்களாகும். இதன் காரணமாக டலஸ் அழகப்பெரும எதிர்பார்த்த வாக்குகளை பெற முடியாமல் ரணில் எதிர்பார்த்த அளவுக்கு 134 வாக்குகள் பெறுகின்ற நிலைமையை உருவாக்கி இருக்கின்றது.

எழுபது ஆண்டு கால அனுபவத்தை கொண்டு இருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஒரு கட்சியாக இருக்கும்போது இவ்வாறான தன்னிச்சையான செயற்பாடுகள் எவ்வளவு விபரீதத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. எமது கருத்தில் நம்பிக்கையில்லை என்று இந்தியாவை இழுத்து பேசவேண்டிய சந்தர்ப்பத்தை நினைத்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

அவ்வாறு பாவித்துத்தான் டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிக்கவேண்டும் என்று தீர்மானம் எடுத்திருந்தால் அது பாரதூரமானது. இந்த கருத்து மிகவும் பாதகமானது. முழுமையான எங்களுக்கு பலமாக இருக்கின்ற இந்தியாவின் பெயரை கூறுவது மிகவும் தவறான செய்தியாகும். இதனால் பாரிய விளைவுகளை எதிர் நோக்க வேண்டி வரும்-என்றார். (அ)

## ஜனாதிபதி...

மையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது என ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வு அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது எனவும் ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ரணில்...

தலைவர்கள் கூட்டம் நேற்று இடம்பெற்றிருந்தது. இதன்போதே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார். இருவருக்கும் இடையில் நட்பு ரீதி யாகவும், நேர்மையாகவும் கருத்துப் பரி மாற்றம் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காது தேசிய ஒருமித்த கருத்தை ஏற்படுத்தும் வகையில் பாராளுமன்ற குழுக்கள் முறைமையினை பலப்படுத்துவதற்கு இதன்போது முன்மொழியப்பட்டதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

## எரிபொருள்...

கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெற்றோல் விநியோகத்தைப் பொறுத்த வரை தொடர்ச்சியாக இன்று முதல் 29ஆம் திகதி வரை நாளாந்தம் 15 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது. மக்கள் எந்தவித நெருக்கடியையும் ஏற்படுத்தாது அமைதியாக இருந்து எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும்.

டீசலை பொறுத்தவரை 8 தொடக்கம் 10 வரையான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 25ஆம் திகதி வரை தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதற்குரிய அட்டவணை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ளது .

இன்று எரிபொருள் விநியோகம் ஆரம்பித்திருக்கின்ற நிலையில் பொது மக்கள் ஒன்று கூடி நெருக்கடியை ஏற்படுத்துவதாகவும் அதேபோன்று எரிபொருள் பெறுவதற்குரிய விதிமுறை மற்றும் அறிவுறுத்தலை பின்பற்றாமலும் இருப்பதால் அங்கு ஒரு குழப்பமான நிலை உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டிருக்கின்றன.

ஆகவே எரிபொருளை பெற்றுக் கொள்ளும் பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசாங்கத்தினால் தேசிய எரிபொருள் விநியோக அனுமதி பத்திர முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக 25ஆம் திகதிக்கு பின்னதாக கட்டாயமாக அமுலில் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் அந்த முறைமை முழுமையாக அமுல்படுத்தும் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே பிரதேச செயலாளர்களால் வழங்கி இருக்கின்ற எரிபொருள் விநியோக அட்டைகளை பயன்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இது யாழ்ப்பாண மாவட்டத்திற்கான விசேட ஏற்பாடு இதை தேசிய முறைமையுடன் இணைந்த வகையில் கொண்டு செல்ல முடியும். நெருக்கடியை குறைப்பதற்கு அனைவருக்கும் முறையாக இந்த பங்கு அட்டை முறையை அமுல்படுத்தியிருக்கின்றோம். வாகன இலக்க தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் இந்த விநியோகம் இடம்பெறும்.

எரிபொருள் விநியோக அட்டைகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றோம்.

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தை மிக மிக அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் விநியோகிக்க ஒதுக்கி இருக்கின்றோம். அதில் எரிபொருளை நிரப்ப மாவட்ட செயலகத்தின் முன் அனுமதியை பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

பொதுமக்கள் பலரும் இந்த திட்டத்தினாலான நன்மைகளை வரவேற்கும் சமயம் ஒரு சிலர் இந்த திட்டத்தை குழப்புவதற்கு முனைவதையும் நாங்கள் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. ஆகவே அனைவரும் ஒத்துழைத்து இந்த முறைமை மூலம் சீரான விநியோகத்தை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (அ-03)

ஈழநாடு
Eelanadu

# முட்டாள் போராட்டக்காரர்களால் கோட்டாபய வீட்டுக்கு சென்றார்!

## விமல் வீரவன்ஸ சீற்றம்



கொழும்பு, ஜூலை 22

வழிமுறை திட்டமோ, அறிவோ இல்லாத போராட்டம் காரணமாக இறுதியில் ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவிக்கு வந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம் நடத்திய நேரத்தை தவிர, அதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை.

அப்படி நடந்தால், ஜனாதிபதி பதவி தொடர்பில் அராஜக நிலைமையேற்படும் என்பதே இதற்கு காரணம். ஏன் இந்த விடயம் இளம் போராட்டக்காரர்களுக்கு புரியவில்லை.

அவர்களுக்கு அதனை புரிந்துகொள்ளும் அளவுக்கு அறிவோ, தெளிவோ புத்தியோ இருந்ததாக எமக்கு தெரியவில்லை. போராட்டக்காரர்கள் தமது மாளிகையை முற்றுகையிட்டபோது துப்பாக்கிச் சூடு நடத்துமாறு உத்தரவிடாத ஜனாதிபதி வீட்டுக்கு சென்றுள்ளார்.

ஞானமில்லாத, நோக்கமில்லாத, அறிவில்லாத போராட்டக்காரர்களின் செயற்பாடுகளின் பிரதிபலனாக ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவிக்கு வந்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு ஏன் வாக்களிக்கப்பட்டது. அதற்கு பொதுவான காரணம் இருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் தமது பாதுகாப்பு தொடர்பான மனநிலை. எல்லாவற்றுக்கும் முதல் இந்த நிலைமையை இல்லாமல் செய்ய வேண்டும்.

இந்த மனநிலையை ஏற்படுத்தியது யார்? போராட்டகாரர்கள். இரவு வீடுகளுக்கு சென்று தீயிட்ட குழுவினர். பாராளுமன்றத்தை முற்றுகையிட சுனில் ஹந்துன்நெத்தி, லால் காந்த போன்ற பாராளுமன்றத்தை மற்றுமொரு ஜனாதிபதி செயலகமாகவும் ஜனாதிபதி மாளிகையாகவும் மாற்ற அவர்கள் முயற்சித்த நேரத்தில் அதற்கு இடமளிக்காது, அவசரகாலச் சட்டம், ஊரடங்குச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பாதுகாப்புப் பிரிவினருக்கு உத்தரவுகளை பிறப்பித்தது, ரணில் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

அரசியல் நிகழ்ச்சி நிரல், எதிர்கால நோக்கம், விமர்சன ரீதியிலான வாசிப்பு என்று எதுவுமில்லாத காதில் தோடுகளை அணிந்த தாடிக்காரர்கள் வீரர்களாக மாறி, அழகான கதைகளை கூறி, சமூக செயற்பட்டாளர்கள், நடிகர், நடிகைகள் வந்து தூண்டி விட்டு, இறுதியில் ரணிலை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வர வழியை ஏற்படுத்தினர்-என்றார். (அ)

# நாட்டு மக்களின் கோரிக்கைகளை புதிய ஜனாதிபதி நசுக்கக்கூடாது!

### புதிய ஜனாதிபதியிடம் ஹிருணிகா கோரிக்கை



கொழும்பு, ஜூலை 22

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி இந்த நாட்டு மக்களின் ஆணையைப் பிரதிபலிக்கவில்லை என முன்னாள் பாராடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றினையிட்டு இதனை தெரிவித்துள்ளார்.

அவர் தனது பதிவில்-

ரணில் ராஜபக்ஷ அவர்களே உங்களின் வெற்றி பாராளுமன்ற யதார்த்தத்தின் விசித்திரமான பிரதிநிதித்துவம் மட்டுமே. எனவே மக்களுடன் நின்று ஜனநாயக கொள்கைகளை கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தயவு செய்து, உரிமைக்காக போராடும் மக்களின் கோரிக்கைகளை நசுக்காதீர்கள். மக்களின் குரலுக்கு செவிசாய்த்து விரைவில் பொதுத்தேர்தலுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

# நீர்கொழும்பு கடலில் 33 பேர் கைது

கொழும்பு, ஜூலை 22

சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு கடல் வழியாக வெளியேற முயன்ற 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்புக் கடற்படையினரால் நேற்று குறித்த 33 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக இவ்வாறு நாட்டை விட்டு கடல் மார்க்கமாக வெளியேற முயற்சிப்பவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நிமல் லஞ்சம் கோரினாரா? ஜப்பானிய நிறுவனம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 22

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள ஜப்பானிய நிறுவனத்திடம், முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இலஞ்சம் கேட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை, ஜப்பானிய நிறுவனம் மறுத்துள்ளது.

நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் சுமத்திய குற்றச்சாட்டில் ஆதாரமற்றது என ஜப்பானிய நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

570 மில்லியன் டொலர் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகமையின் நிதியுதவியுடன், கட்டுநாயக்க விமான நிலைய நிர்மாணப் பணிகள் தொடர்பான விடயத்திலேயே இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இதனையடுத்து விமானப் போக்குவரத்து முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தனது பதவியில் இருந்து தற்காலிகமாக விலகினார்.

ஜப்பானின் தாய்சேய் கோப்பரேசன் நிறுவன பொது முகாமையாளர் மஸ்காட்டோ சாட்டோ இது தொடர்பில் தெரிவிக்கையில், நிறுவனத்திடம் இலஞ்சம் எதுவும் கேட்காத அமைச்சர் டி சில்வா மீது சுமத்தப்பட்டுள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கேட்டு தாம் அதிர்ச்சியடைந்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்கு முதலீட்டாளராக ஜெய்கா நிதியுதவி அளித்து வருவதாகவும், இந்த முயற்சியில் ஜப்பானிய அரசாங்கத்தின் ஈடுபாடு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் ஆதாரமற்ற சமூக ஊடக அறிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை சேதப்படுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

# 'கோ-ஹோம்-ரணில்' போராட்டத்தை இனி விஹாரமாதேவி பூங்காவில் நடத்தலாம்!

கொழும்பு, ஜூலை 22

போராட்டக்காரர்கள் தமது 'கோ-ஹோம்-ரணில்' போராட்டத்தை, தடையின்றி நடத்துவதற்காக கொழும்பு விஹாரமாதேவி பூங்காவினை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று கட்சித்தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போதே ஜனாதிபதி இந்த விடயத்தினை தெரிவித்தார் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசாங்கத்தையும், பாராளுமன்றத்தையும், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட துறைசார் குழுக்களை அமைத்து நடத்த விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்றம் புது ஆரம்பத்துக்காக 24 மணிநேரம் ஒத்திவைக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்ததாகவும் அவர் கூறினார். (அ)

# "கோட்டாகோகம" போராட்டக்காரர்கள் இருவருக்கு நீதிமன்றத்தால் பிடியாணை

கொழும்பு, ஜூலை 22

கோட்டா கோ கம போராட்டக்களத்தின் முக்கியஸ்தர்களான வசந்த முதலிகே மற்றும் ரத்கரவ்வே ஜீனரத்ன தேரர் ஆகியோருக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு சட்ட விரோதமான முறையில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து இடையூறு ஏற்படுத்தியதாக குறித்த இருவருக்கும் எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கில் மாவட்ட நீதிமன்றில் இவர்கள் இருவரும் முன்னிலையாக தவறியதால் இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் போராட்டத்தின் முக்கிய தலைவர்களான குறித்த இருவரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# ஜூலை 25 விசேட டெங்கு ஒழிப்பு

கொழும்பு, ஜூலை 22

நாடளாவிய ரீதியில் டெங்கு தொற்று பரவும் அபாயம் உள்ளதால் எதிர்வரும் 25ஆம் திகதி விசேட டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 25ஆம் திகதி அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் ஒரு மணித்தியாலம் வரையில் சுற்றுச்சூழல் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 43,000க்கும் அதிகமான டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், கடந்த ஜூன் மாதத்தில் மாத்திரம் 8,000க்கும் அதிகமான டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.00 அணி :இயற்கை வழி



07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மலையாள திரைப்படம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு